**SCENE NO : 1** **MANSION / INT / DAY**

Song start (நான் யார்.......)

அறிவு நடந்து வருகிறான்.

Shift focus to அறிவு.

ஒரு ரூமை நோக்கி corridor வழியாக
நடந்து வருகிறான்.

ரூம் கதவை திறந்து உள்ளே வந்து
கதவை மூடுகிறான்.

ரூமினுள் இருக்கும் ஒரு மரஅலமாரியில்
தொப்பியையும், பேக்கையும் கழற்றி
வைக்கிறான்.

போர்வையால் ஒருவன்
மூடப்பட்டுக்கிடக்கிறான்.

போர்வையை விலக்குகிறான்.

ஒருவன் முகம் முழுவதும் plaster-ஆல்
சுத்தப்பட்டு கைகள் கட்டப்பட்டு
இருக்கிறான்.

அறிவு அவனை அடித்து அங்குள்ள ஒரு
மரச்சேரில் அமரவைக்கிறான்.

மூக்கில் இருந்து இரத்தம் வழிய அவன்
அலறுகிறான்

அறிவு அவன் முகத்தில் சுற்றிருக்கும் plaster-யை அவிழ்க்கிறான்

Plaster-யை பிரித்தவுடன் அவன் கத்த தொடங்க அறிவு அவன் முகத்தில் தன் கைகளால் குத்துகிறான்

அவன் மறுபடியும் கத்த அறிவு அவன் முகத்தில் சரமாரியாக குத்துகிறான்

அறிவு தனது இடது கையில் கட்டியிருக்கும் வாட்சை அவிழ்த்து அங்குள்ள மரஅலமாரியில் வைக்கிறான்

**பாண்டி** : டேய் தம்பி யாருடா நீ

அறிவு bag-ல் எதையோ எடுத்தபடியே அவனிடம் பேசுகிறான்

**அறிவு** : உன் பேர் என்ன

**பாண்டி** : ஏன்

அறிவு bag-ல் இருந்து ஒரு சுத்தியை எடுத்து மரஅலமாரியில் வைக்கிறான்

**அறிவு** : நீ என்ன தோழில் பண்ற

**பாண்டி** : national business-யே பண்றேன்

அறிவு ஒரு video camera-வை வைக்கிறான்.

**பாண்டி** : அதான்பா திருடுறது

மற்றும் அறிவு அந்த bag-ல் இருந்து cutting blade, screw driver அனைத்தையும் எடுத்து மரஅலமாரியில் வைக்கிறான்.

அறிவு அவனை அடிக்க அவன் வலியில் முனங்குகிறான்.

அறிவு அவன் முன் video camera-வை on செய்து வைக்கிறான்.

அறிவு அவனை அடிக்க அவன் வலியில் முனங்குகிறான்.

அறிவு அவன் முகத்தில் இருபுறமும் குத்த அவன் கத்துகிறான்.

Video camera-வில் recording-யை ஆரம்பித்து அவன் பேசுவதை record செய்கிறான்.

**அறிவு** : ஏன் எப்பவுமே ladies-ச மட்டும் டார்கெட் பண்ற

**பாண்டி** : ladies-குதான் பயம் அதிகம். பொருள் அடிக்கும் போது அவுங்கள பாக்கனுமே. கை கால்லாம் உதறும்.

**அறிவு** : இது வரைக்கும் எத்தன பேர கொன்னு இருக்க

**பாண்டி** : ஒத்தா யாருடா நீ

அறிவு சுத்தியை எடுத்து அவன் முகத்தில் அடிக்கிறான்

**பாண்டி** : சொல்றேன் சொல்றேன் ரெண்டு பேர கொன்னுருக்கேன்

**பாண்டி** : வேளச்சேரியில ஒரு வீட்ட plan பண்ணுனோம் வீட்டுல பொம்பளையும் அவளோட பொண்ணுதான்.

**பாண்டி** : புருஷன்காரன் வெளியூர் போயிட்டான்.

**பாண்டி** : silent-ஆ இரு பொருள எடுத்துட்டு போறேன்னு சொன்னேன்.

**பாண்டி** : சவுண்டு விட்டாளுங்க என்ன பண்றதுனே தெரியல.

**பாண்டி** : ரெண்டு கழுத்தையும் அறுத்து போட்டேன்

அறிவு அவன் முகத்தில் தெரித்த இரத்தத்தை தன் கையால் துடைக்கிறான்.

பாண்டி முகம் முழுவதும்
இரத்தகரையோடு முனங்குகிறான்.

அறிவு அங்குள்ள bathroom-ல் ஒரு வாளியில் இருக்கும் தண்ணீரை எடுத்து அவன் முகத்தை கழுவுகிறான்.

அறிவு அந்த mansion-னை விட்டு வெளியே வருகிறான்

அறிவின் voice over

**அறிவு** : எனக்கு தெரியும் இவன் இந்த இடத்த விட்டு உயிரோட போ மாட்டான். இன்னும் எத்தன பேருன்னு தெரியல. நான் தேடுறது ஒருத்தனையா இல்ல எத்தன பேருனே எனக்கு தெரியாது என்கிட்ட மாட்ட போற அந்த நாள்தான் அவங்களோட கடைசி நாளா இருக்கும்

அறிவு தொப்பியை தன் தலையில் அணிகிறான்.

அறிவு bike-கை start செய்கிறான்

Camera top angle-**ல்** அப்படியே zoom out ஆகி Tilt up ஆகி நிற்கிறது

City atmosphere shot-ல் மெட்ரொ title

**[CUT]**

**SCENE NO : 1A** **MANSION / INT / DAY**

பாண்டி அந்த ரூமின் கதவை திறந்து கட்டிய கை கால்களால் அந்த video camera-வை stand-உடன் எடுத்தபடியே குதித்து குதித்து அந்த corridor-ல் வருகிறான்.

அங்கு ஒருவன் திரும்பி நின்றபடி சிகரெட் பிடித்துக்கொண்டுருக்கிறான்.

பாண்டி அவன் அருகே வந்து உதவி கேட்கிறான்.

**பாண்டி** : சார்

**பாண்டி** : சார் சார் சார் help சார்

**பாண்டி** : help சார் காப்பாத்து சார்

**பாண்டி** : காப்பாத்து சார் சார் காப்பாத்துங்க சார் காப்பாத்துங்க help பாண்ணுாங்க சார்

அவன் சிகெரெட் பிடித்தபடியே பாண்டியை நோக்கி திரும்புகிறான்

**பாண்டி** : காப்பாத்துங்க சார்
காப்பாத்துங்க சார்
கட்டிப்போட்டு அடிக்குறான்
சார்

**பாண்டி** : சார் காப்பாத்துங்க சார்

**குமார்** : என்ன பாத்தா காப்பாத்துற
மாதிரி தெரியுதா

குமார் புகைவிட்ட படியே சிகரெட்டை அவன் மீது சுண்டிவிடுகிறான்.

குமார் drilling machine-உடன் பாண்டி அருகே வருகிறான்.

**குமார்** : டேய் திருட்டு....... நான் ஒரு
வாட்டிதான் கேப்பேன் போன
சனிக்கிழமை என்னடா
பண்ணிட்டு இருந்த

**பாண்டி** : டேய் போலீஸ்
ஸ்டெஷன்லயும் இதாண்டா
கேட்டாங்க

**பாண்டி** : யாருடா நீங்க

குமார் Drilling machine-னை on செய்து பாண்டியின் கண் அருகே கொண்டுவருகிறான்

**பாண்டி** : சொல்லிடுறேன்
சொல்லிடுறேன்

**குமார்** : சொல்லு

**பாண்டி** : சிங்கப்பூர்ல இருந்து கோல்டு export ஆகிட்ருக்கு
அத download
பண்றதுக்காக airport-க்கு
போய் இருந்தேன்

**பாண்டி** : அன்னைக்கு ஒரே busy

**பாண்டி** : அந்த கோல்டுலாம் இப்ப
என்கிட்டதான் இருக்கு

**அறிவு** : கோல்டு எப்படி black
market-ல விக்குறீங்க

**பாண்டி** : கோல்டு விக்குறது
அவ்வளவு சுலபம் இல்ல.
Black market-ல கோல்டு
விக்கறதுக்குனே தனி
ஏஜென்டுங்க இருக்காங்க.
அவுங்ககிட்ட போய்
கொடுத்தா அவுங்களே மு......
முடிச்சு கொடுத்துருவாங்க

**அறிவு** : எனக்கு அந்த கோல்ட் வேணும்

**பாண்டி** : என் phone-ல முயல் மூஞ்சின்னு ஒரு நம்பர் இருக்கும் அத போடு. குடுத்தா விட்டுருவல்ல

குமார் போனில் நம்பரை dial செய்கிறான்

**குமார்** : கொன்னுடுவேன் silent-ஆ பேசு

போன் attend ஆகிறது

**முயல்** : ஏய் பாண்டி நேத்துல இருந்து ஆளையே காணோம் போனும் இல்ல

**பாண்டி** : முயல் காது எங்கடா இருக்குற

**முயல்** : நான் நம்ம ஏரியாவுலதான் இருக்கேன், என்ன மச்சான் என்ன கத

**பாண்டி** : உடனே பொருள எடுத்துக்கிட்டு parrys corner வாடா

**முயல்** : அப்படியா சரி

**பாண்டி** : என் bike-ல ஒருத்தன் வருவான் அவன்கிட்ட பொருள கொடுத்துரு

**முயல்** : என்ன மச்சான் விஸ்க்கி விஸ்க்கி பேசுற

**பாண்டி** : அதெல்லாம் ஒன்னும் இல்ல மச்சான் cold

**முயல்** : tablet எதாவது போடு மச்சான். ஓகே நான் இன்னும் அர hour-ல வந்துறேன் payment-லாம் பேசிட்டியா

**பாண்டி** : payment-லாம் நான் பேசிட்டேன்டா. பொருள எடுத்துக்கிட்டு இங்க வாடா

**முயல்** : சரி மச்சான் முடிச்சுட்டு அப்படியே foreign போயிட்டு வரலானா.

குமார் போனை கட் செய்கிறான்

**அறிவு** : எனக்கு அந்த gold-ட விக்கனும் உன் agent-ட பேசு, புது party-ன்னு சொல்லு

**பாண்டி** : சொன்னா விட்டுருவியா

அறிவு ஆம் என்பதுபோல் தலையை அசைக்கிறான்

**பாண்டி** : ஏஜென்டு நம்பர் சொல்றேன் போடு

குமார் நம்பரை போனில் டையல் செய்கிறான்

**பாண்டி** : 9171717308

ரிங் போகிறது

**[CUT]**

**SCENE NO : 1B** **PARIS ROAD / EXT / DAY**

Song continue

அறிவு ரோட்டில் bikeகில் செல்கிறான்.

அறிவு bikeகை ஓட்டியபடியே helmet போடுகிறான்.

அறிவு ஒரு சாலை ஓரத்தில் bikeகில் அமர்ந்தவாறு ஹெல்மெட்டுடன் இருக்கிறான்.

பாண்டியின் ஆள் அங்கு bikeகில் வருகிறான்.

அறிவை ஹெல்மெட்டை கழட்ட சொல்கிறான்.

அறிவு ஹெல்மெட்டை கழற்றிய பின் அவன் முகத்தை பார்த்துவிட்டு அவனிடம் ஒரு bag-கை கொடுத்துவிட்டு அங்கிருந்து செல்கிறான்

**[CUT]**

**SCENE NO : 1C** **MANSION / INT / DAY**

குமாரும் அறிவும் mansion corridor-ல் பேசிக்கொள்கின்றனர்

**குமார்** : மச்சி நம்ம தேடுற ஆள் இவன் கிடையாதுடா

**குமார்** : சரி இந்த gold-ட வச்சு என்ன பண்ண போறோம்

**அறிவு** : black market-ல
கோல்ட் எங்கெல்லாம்
travel ஆகுதுனு பாக்கனும்
ஏதாவது சிக்கும்

குமார் தன் பாக்கெட்டின் உள்ளே இருந்து ஒர் சிகரெட்டை எடுத்து வாயில் வைத்து பற்ற வைக்க தன் பாக்கெட்டில் lighter-ரை தேடுகிறான்

**குமார்** : ஓகே இவன என்ன பண்ண போறோம்

**அறிவு** : அந்த ACP நம்பர் கேட்டேனே கிடைச்சுதா

**குமார்** : ம்

அறிவு குமார் வாயில் இருக்கும் சிகரெட்டை எடுத்து தன் கையால் நசுக்கி தூக்கி எறிகிறான்

**[CUT]**

**SCENE NO : 2** **POLICE STATION / INT / DAY**

போலீஸ் station-ல் இன்ஸ்பெக்டர் ரௌடி 1-யிடம்

**இன்ஸ்** : டேய் கையெழுத்து போடுடா

**ரௌடி 1** : சரக்கு வேணுனா கொடு போடுறேன் கையெழுத்துயெல்லாம் போட முடியாது.

**ரௌடி 1**: எவன் வூட்டுல எவனோ திருடுனாக்கா அதுக்கு நான் கையெழுத்து போடனுமா

**ரௌடி 1** : என் வக்கீலு வரும் போது சொல்லிதான் அனுப்பிச்சு இருக்குறான் போம்போது எதாவது கையெழுத்து கியெழுத்து போட்டுறாதன்னு

S.I. pad-யை கையில் வைத்தபடி A.C.P-யை திரும்பிபார்க்கிறான்

A.C.P, S.I.-யை பார்த்து தலையை அசைக்கிறார்

**ரௌடி 1** : ஆ... லுக்கு விட்டாக்கா பயந்துருவாங்காளா இப்ப, கிளம்பு... கிளம்பு என் advocate on the way

**S.I.** ரௌடியை பார்த்து சிரித்துவிட்டு அங்கிருந்து நகர்கிறார்.

**ரௌடி 1** : போட்டுக்க மச்சி எப்படி சீன் போட்டேன் பாத்தியா

ரௌடி 2 அழுதபடியே ரௌடி 1 -யை பார்க்கிறான்.

போலீஸ் ஒரு வாளி நிறைய ஐஸ்கட்டிகளை கொண்டு வந்து ரௌடிகள் முன் வைக்கிறார்.

A.C.P போலீஸை பார்க்க

**ரௌடி 1** : என்ன ஐஸ்சா, என்ன சார் ஜில்லுன்னு ஒரு சர்பத் ஒன்னு எடுத்துட்டு வா

போலீஸ் ரௌடி 2 பிடித்து இழுக்கிறார்

**போலீஸ்** : டேய் வாடா

**ரௌடி 2** : சார் சார் சார் சார் சார்

**போலீஸ்** : டேய் வாடா, உட்காருடா

ரௌடி 2 வாயினுள் ஐஸ்கட்டிகள் திணிந்து ஒரு துணியால் அவன் வாய் கட்டப்படுகிறது.

ஒரு போலீஸ் தன் இரு கைகளாலும் அவனின் இரு கன்னங்களிலும் அடித்து அவன் வாயினுள் இருக்கும் ஐஸ்கட்டிகளை உடைக்கிறார்.

ரௌடி 2 வாயில் இருந்து இரத்தம் வடிகிறது.

ரௌடி 1 அதை பார்த்து எழுந்து S.I-யை நோக்கி பயந்தபடியே நடக்கிறான்

S.I கையில் இருக்கும் pad-டை வாங்கி

**ரௌடி 1** : சார் அத கொஞ்சம்

**ரௌடி 1** : ஒரு கையெழுத்து போதுமா இல்ல ரெண்டு மூணு வாங்கி வச்சுக்கோ சார்

**போலீஸ்** : டேய் போடுறா

A.C.P போனுக்கு ஒரு message வருகிறது

A.C.P message-ஐ open செய்கிறார்

**Message** : Pls come in private udaya mansion, room no 328, old station road, mannady, Chennai

**[CUT]**

**SCENE NO : 3** **GYM / INT / DAY**

City atmosphere shot

அறிவும் குமாரும் bag-குடன் ஒரு ஜிம்மிற்குள் வருகின்றனர்

**குமார்** : டேய் நீ இங்கயே உட்காந்து இரு நான் போய் பேசுறேன்.

அறிவு அங்குள்ள ஒரு chair-ல் அமர்கிறான்

**குமார்** : சார் இங்க மாஸ்டர் யாரு

**ஆண்** : பின்னாடி கருப்பு t-shirt-ல இருக்காரு

குமார் கையில் ஒரு bag-குடன் மாஸ்டரின் அருகில் செல்கிறான்

**குமார்** : மாஸ்டர் பாண்டி அனுப்புனான்

குமார் மாஸ்டரிடம் bag-கை கொடுக்க மாஸ்டர் bag-கை பிரித்து பார்த்துவிட்டு

**மாஸ்டர்** : புருஷோத்

**மாஸ்டர்** : எல்லாரையும் கிளம்ப சொல்லு

**ஆண் 1** : வர்றேன் மாஸ்டர்

**ஆண் 2** : bye மாஸ்டர்

**குரல்கள்** : கிளம்புறேன் மாஸ்டர்

**ஆண் 3** : மாஸ்டர் இங்கலாம் packs வர்றதுக்கு என்ன பண்ணனும் சொல்லவே இல்ல

**மாஸ்டர்** : night phone பண்ணூ சொல்றேன்

**ஆண் 3** : சரி ஓகே மாஸ்டர்

அறிவு chair-ல் அமர்ந்திருக்கும் back shot

chair-ல் அமர்ந்திருக்கும் profile shot

**[CUT]**

**SCENE NO : 3A** **MANSION / INT / DAY**

A.C.P -யும் S.I-யும் mansion room
கதவை திறந்து உள்ளே வருகின்றனர்

ஒரு பொருள் போர்வையால் மூடப்பட்டு
அதில் to Mr.A.C.P என்று
எழுதியிருக்கிறது

S.I. அந்த போர்வையை பிரிக்க

**S.I.** : சார் இவன் பாண்டி சார்
வேளச்சேரியில அம்மா
பொண்ணு murder case-ல
நம்ம சந்தேகப்பட்ட
accused சார்

video camera-வுடன் dead body
இருக்கிறது

**A.C.P** : அந்த camera-வ check
பண்ணுங்க.

**[CUT]**

**SCENE NO : 3B** **GYM / INT / DAY**

ஜிம்மில் ஏஜென்ட் அரவிந்த் bag-கை பிரித்துப்பார்க்கிறான்

**அரவிந்த்** : ஏய் எப்படிப்பா இவ்வளவு வருஷாமா தோழில்ல இருக்கேன் என் கையில இப்படியெல்லாம் பெருசா எதுவும் மாட்ட மாட்டேங்குது, நேரம்... ஒன்னும் புரியல

**மாஸ்டர்** : சரி யாராவது buyers இருக்காங்களா

**அரவிந்த்** : முன்ன மாதிரியெல்லாம் இப்ப buyers யாரும் இல்ல... அதுவும் இல்லாம இது state பிரச்சனை இல்ல.. central பிரச்சனை ரொம்ப risk மாட்டுனா காலி

குமார் ஏஜென்ட்டிடம்

**குமார்** : சார் இந்த market-ல இருக்குற சங்கரு ரமேஷ ட்ரை பண்ணா

ஏஜென்ட் குமாரை திரும்பிபார்க்கிறான்

மாஸ்டர் ஏஜென்ட்டிடம்

**மாஸ்டர்** : பிள்ளைங்க எல்லாரையும் விசாரிச்சு பாத்துட்டுதான் வந்து இருக்காங்க

ஏஜென்ட் குமாரிடம்

**அரவிந்த்** : நீங்க சொன்ன ரெண்டு பேர்ல ஒருத்தன் ஊர விட்டு போயிட்டான் இன்னொருத்தன் உலகத்த விட்டே பொய்ட்டான்

மாஸ்டர் ஏஜென்ட்டிடம்

**மாஸ்டர்** : வேறா யாரு இருக்கா

**அரவிந்த்** : இவனுங்களலாம் நம்பி பேசலாமா

**மாஸ்டர்** : அதலாம் நம்பாலம்.. பேசு

ஏஜென்ட் தன் bag-ல் இருந்து நிறைய செல்போன் எடுக்கிறான், ஒரு சின்ன pad-டை எடுத்து table-ல் வைக்கிறான்

பேனாவை கையில் வைத்து ஏஜென்ட் சாமி கும்பிடுகிறான்

**[CUT]**

**SCENE NO : 3C** **GYM / EXT / DAY**

காரின் பின் சீட்டில் அமர்ந்திருக்கும் மின்னல் சேகருக்கு போன் வருகிறது

மின்னல் சேகர் போனை attend செய்கிறான்

போனில் மின்னல் சேகரின் குரல்

**குரல்** : எங்க இருக்க

**அரவிந்த்** : சென்னையில்தான் இருக்கேன் என் பேரு அரவிந்த்

**குரல்** : jewel-லா, piece-சா

**அரவிந்த்** : piece-தான் ஆனா பெருசு 6.5 K.G

**குரல்** : sim-ம தூக்கி போட்டுறாத

**குரல்** : night பத்து மணிக்கு வா address message பண்றேன்

**அரவிந்த்** : ம் ஒகே

**அரவிந்த்** : பத்து மணிக்கு வர சொல்லி இருக்காங்க

மாஸ்டர் ஏஜென்ட்டிடம்

**மாஸ்டர்** : என்னய்யா ஒரு மாதிரி ஆயிட்ட

**அரவிந்த்** : ரொம்ப danger-ரான ஆளுப்பா, தம்பிகளா பிரச்சனை எதுவும் பண்ணிறலையே ஏதாவது தப்பாச்சுனா அவ்வளவுதான் காலி பண்ணிருவான்

அறிவு அவன் முன் இருக்கும் ஃபேன்னை உற்று பார்க்கிறான் (stop freeze shot)

**[CUT]**

**SCENE NO : 4** **OFFICE / INT / DAY**

அறிவின் Voice over

**அறிவு** : என்னோட பேரு அறிவழகன்,

பரிவு பத்திரிக்கை office-ன் exterior shot

**அறிவு** : பரிவுங்குற பத்திரிக்கையில writer-ஆ வேலை செய்யுறேன்.

பரிவு பத்திரைக்கை office-ன் interior shot

**அறிவு** : சின்ன வயசுல இருந்து writer ஆகனுன்னு ரொம்ப ஆசைப்பட்டு வாங்குன வேலை.

**[CUT]**

**SCENE NO : 4A** **HOME / INT / DAY**

அறிவு வீட்டின் exterior top angle shot

**அறிவு** : வீடு st.thomas mount-ல இருக்கு

அறிவு வீட்டின் வெளியே உள்ள அறிவுமதி இல்லம் என்ற பலகை காட்டப்படுகிறது

அறிவின் அப்பா, அம்மா, தம்பி introduction

**அறிவு** : அப்பா பேரு துரை retired constable, retired ஆனதுக்கு அப்பறம் news பாக்குறது மட்டும்தான் அவரோட timepass

**அறிவு** : அம்மா பேரு ஜெயா, என்னோட அம்மாவும் அப்பாவும்தான் இந்த உலகத்தோட best couples

**அறிவு** : என் தம்பி பேரு மதியழகன் D.C college-ல first year engineering பண்றான்.

**அறிவு** : பெருசா பணம் இல்ல
பேராசையும் இல்ல
middle class family ஆனா
high class சந்தோஷம்

அறிவின் அப்பா டி.வி.யில் news பார்த்துகொண்டிருக்க அம்மா காப்பி கொண்டுவந்து கொடுக்கிறாள்.

அம்மா காப்பியை கொடுத்துவிட்டு remote-டை எடுத்து channel-லை மாற்றிவிட்டு remote-டை கீழே வைத்துவிட்டு அங்கிருந்து நகர முயன்று

**ஜெயா** : காபி... இந்த T.V-ய பாரு எப்ப
news reel மாதிரி

திரும்பவும் வந்து remote-டை கையில் எடுத்து செல்கிறாள்.

மதி, bed-ல் படுத்திருக்க அம்மா மதியை எழுப்புகிறாள்

**ஜெயா** : டேய் எழுந்திரிடா அண்ணே
பாரு ready ஆகி
கிளம்பிட்டான் ப்பா

**SCENE NO : 4B** **HOME / INT / DAY**

அப்பா, அறிவு, மதி dinning table-லில் அமர்ந்திருக்க அம்மா உணவு பரிமாறுகிறாள்

அறிவு மதியிடம்

**அறிவு** : மதி இந்த Friday college leave போட்டுரு நான் already leave சொல்லிட்டேன்

**மதி** : ஏண்ணே

அம்மா அறிவிடம்

**ஜெயா** : இந்தா ஏண்டா ரெண்டு பேரும் leave போடனும்

**அறிவு** : ம்மா மறந்துட்டீங்களா உங்க ரெண்டு பேரோட anniversary, நல்ல grand-ஆ celebrate பண்ணனும், என்னடா

**மதி** : ஒகேணே செம்மையா பண்ணிறலாம்

அப்பா அறிவை பார்த்து சிரிக்கிறார்

அப்பா அம்மாவிடமும் அறிவிடமும்

**அப்பா** : இவன் சம்பள பணத்த வீணடிக்க போறான், டேய் வீட்டு commitments ஏகப்பட்டது இருக்குடா

**அறிவு** : அப்பா 25000 save பண்ணி வச்சு இருக்கேன்பா அம்மாக்காக, super-ஆ special-ஆ ஒரு gift வாங்கி தருவேன் பாருங்க

**துரை** : அம்மாக்கு மட்டும் gift-ஆ அப்ப எனக்கு இல்லையா

**அறிவு** : உங்களுக்கு எல்லாம் என்னத்துக்கு gift-உ அஞ்சு கிலோ news paper வாங்கி தர்றேன் ஒரு மாசம் full-ஆ உட்காந்து படிங்க

அம்மா chair-ல் அமர்கிறாள்

மதிக்கு phone call வருகிறது

**மதி** : அப்ப ஒரு நிமிஷம்

**ஜெயா** : டேய்

மதி attend செய்து சிறிது தூரம் விலகி வந்து பேசுகிறான்

மதி GF share auto-வில் பயணித்தபடியே

**மதி GF** : ஹலோ மதி

பின்னே அம்மா ,அறிவிடம்

**ஜெயா** : எனக்கு கூட தெரியாம எப்படிடா இவ்வளவு சேத்து வச்ச

**மதி** : ம் சொல்லுடா

**மதி GF** : bike matter என்னாச்சு வீட்டுல கேட்டியா

**மதி** : சொல்றேன்

**மதி GF** : உனக்கு ஒரு விசயம் தெரியுமா நம்ம திவ்யாவோட boyfriend சஞ்சய் இருக்கான்ல ஒரு புது K.T.M. bike வாங்கி இருக்கான். செம்மையா இருக்கு தெரியுமா whatsapp-ல pic அனுப்புனான் நான் வேணா உனக்கு send பண்றேன் பாக்குறியா

**ஜெயா** : டேய்

**மதி GF** : ஓ உன் mobile-லதான் whatsapp-பே இல்லல்ல, அவுங்க ரெண்டு பேரும் அந்த bike-லத்தான் weekend outing போறாங்களாம்

**ஜெயா** : சொல்றேன்ப்பா

**மதி GF** : பெருசா பீத்திக்குறா please

**மதி** : எதாவது plan பண்ணுடா என் செல்லம் லா

**மதி** : ஓகே

**மதி GF** : ஓகே love you

மதியும் மதி GF phone-னை கட் செய்கிறார்கள்

Share auto-வில் மதியின் GF அருகே அமர்ந்திருக்கும் ஒருவன் அவளையே வெறித்து பார்க்க

**மதி GF** : அய்ய என்ன

மதி அப்பாவிடம்

**மதி** : அப்பா எனக்கு ஒரு bike வேணும்ப்பா

அப்பா கோபமாக

**துரை** : bike-கா உனக்கு எதுக்க்டா

bike-கு, அண்ணே

காலையில உன்ன

college-ல drop பண்றான்

சாயங்காலம் மட்டும்தானே

நீ bus-ல வர்ற

**மதி** : அய்யோ அப்பா
college-குள்ள போனாலே
ஏதோ ஆதிவாசிய பாக்குற
மாதிரி பாக்குறாங்க அவன்
அவன், bike-கு car-னு
வர்றான் நான் மட்டும்தான்
மொக்கையா இருக்கேன்

**துரை** : டேய் அந்த college-ல
உன்ன படிக்க வைக்குறதே
நம்ம தகுதிக்கு மீறுனது
அப்பவே வேண்டான்னு
சொன்னேன் அறிவுதான்
தம்பி நல்ல college-ல
படிக்கட்டுன்னு சொல்லி
loan போட்டு donation
கொடுத்தான் இப்ப
வரைக்கும் அந்த
loan-தான் கட்டிட்டு
இருக்கான், கொஞ்ச நாள்
போகட்டும்டா என்ன
ஏதுன்னு plan பண்ணிட்டு
ஒரு bike வாங்குவோம்

**மதி** : அதெல்லாம் முடியாது bike
இல்லாம் நான் college
போக மாட்டேன்

**துரை** : டேய் நான் சொல்லிட்டு
இருக்கேன்

அம்மா அப்பாவிடம்

**ஜெயா** : ஏங்க நீங்க சும்மா இருங்க ஏப்பா உனக்கு bike-குதானே வேணும்

அம்மா மதியிடம்

**ஜெயா** : சொல்லுப்பா

**மதி** : ஆமா

அம்மா அறிவிடம்

**ஜெயா** : டேய் அறிவு நீ 25000 பணம் வச்சு இருக்கேன்னு சொன்னல்ல. கூட ஒரு பத்தோ இருபதோ போட்டு மதிக்கு ஒரு நல்ல வண்டி வாங்கி கொடுடா

**அறிவு** : சரிம்மா

**மதி** : எனக்கு K.T.M bike-தான் வேணும்

**ஜெயா** : ஆ அப்ப அவன் சொல்ற bike-கையே வாங்கி கொடுத்துருடா

**அறிவு** : அந்த bike-கோட விலை தெரியுமாம்மா உனக்கு

**ஜெயா** : எவ்வளவுடா

**மதி** : K.T.M மாதிரி
bike-தாம்மா trend

**ஜெயா** : அதான்டா எவ்வளவு

**மதி** : showroom price
insurance, fancy number
எல்லாம் சேந்து 150000 -
தாம்மா வரும்

**ஜெயா** : அண்ணன்கிட்ட அவ்வளவு
காசு இல்லையேடா
இப்போதைக்கு சின்னதா
ஒரு வண்டி வாங்கிக்கோடா

**மதி** : அம்மா please-ம்மா vehicle
loan போட்டா two
days-ல கிடைச்சுரும்மா

அப்பா அம்மாவிடம்

**துரை** : ஏய் என்னடி அவன்
நிலைமை புரியாம பேசிட்டு
இருக்கான் நீங்க ரெண்டு
பேரும் support பண்றீங்க

அறிவு அப்பாவிடம்

**அறிவு** : அப்பா please

**அறிவு** : உனக்கு என்ன bike-தானடா plan பண்ணிறலாம் office-ல check பண்ணி சொல்றேன்

**மதி** : எஸ்…

Music starts

**[CUT]**

**SCENE NO : 4C** **ROAD / EXT / DAY**

அறிவும் மதியும் bike-கில் சாலையில்
செல்கின்றனர்

**[CUT]**

**SCENE NO : 5** **CLASSROOM / INT / DAY**

Classroom-ல் professor பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார்

**PROF** : methods of productions magnetostics and accelerator

மதியின் shot

**PROF** : and

**PROF** : the mechanical generator and the poso electric accelerator so

மதியின் GF shot.

மதியின் GF மதியை பார்க்க மதி அவளை பார்த்து சிரிக்கிறான்.

மதியின் GF அவனை கோபமாக பார்த்து முகத்தை திருப்பிகொள்கிறாள்.

**PROF** : these are the three methods are used to

**PROF** : produce ultrasonic waves

Classroom-ல் கணேஷ்க்கு phone வருகிறது

**PROF** : so here we are going to

**PROF** : discuss about the first method magnetiostics digital generator

**PROF** : are accelerator

கணேஷ் தனது pant packet-ல் இருந்து phone-னை எடுத்து காதில் வைத்து பேசுகிறான்

**கணேஷ்** : மச்சி classல இருக்கேன்டா அப்பறம் பேசுறேன்

**PROF** : so first see the diagram

கணேஷ் phone-ல் பேசுவதை மதி பார்க்கிறான்

**PROF** : so first see the diagram

**கணேஷ்** : ஓகே

கணேஷ் phone-னை கட் செய்துவிட்டு phone-னை பாக்கெட்டில் வைத்துவிட்டு தூங்குகிறான்

**PROF** : so here there using the pro mechanic rod

**PROF** : in apply the

**PROF** : electrical field through the rod

மதி கணேஷை கூப்பிடுகிறான்

**மதி** : டேய் டேய்

**PROF** : the rod getting vibrating packed

**PROF** : produce a sound waves

கணேஷ் மதியை பார்த்துவிட்டு அமைதியாக இருக்கும்படி சைகையில் கூறுகிறான்

**மதி** : ஏய் ச்சு

**மதி** : phone எப்படா வாங்குன

Professor board-ன் பக்கம் திரும்பி board-டை அழிப்பதை பார்த்துவிட்டு அவன் இடத்தில் இருந்து கணேஷின் அருகே சென்று அமருகிறான்

**மதி** : ஏய் தள்ளுடா மச்சி phone-ஆ கொடு

**கணேஷ்** : ஏய்

**PROF** : if the frequency of the sound waves are

கணேஷின் phone-னை எடுத்து பார்க்கிறான்

**மதி** : சூப்பரா இருக்குடா

**PROF** : greater than to kilograms

**கணேஷ்** : நல்லா இருக்கா

**PROF** : its equal to as

**மதி** : ம் எவ்வளவுடா இது

**PROF** : ultrasonic waves

**கணேஷ்** : 40000 ரூபா

PROF : then we will discuss about the

**கணேஷ்** : பஜார்ல வாங்குனா 20000 ரூபா வேணுமா வாங்குறியா

PROF : frequency ranges and resonance the frequency of the

**மதி** : நம்மளால்லலாம் முடியாதுடா வேணும்னா monthly monthly 2000 கொடுத்துறட்டா

PROF : electric acute its equal to be the frequency of the accelerating

**கணேஷ்** : ம் 2000-னா

PROF : it's be the frequency of the

**மதி** : சூப்பரா இருக்குடா

PROF : accelerating acute if necessaries

**கணேஷ்** : சும்மா காமெடிலாம் பண்ணாத முதல்ல phone-ஆ கொடு

**PROF** : all ready you now one by two by route I see

**PROF** : and the frequency of the accelerating rod is one by two il root of e by row

கணேஷ் மதியை நமட்டு சிரிப்புடன் பார்க்கிறான்

**[CUT]**

**SCENE NO : 6** **OFFICE / INT / DAY**

Office-ல் manager குமார் எடுத்த photo-வை laptop-ல் பார்க்கிறார்

**manager** : வேஸ்ட் வேஸ்ட்

**குமார்** : ஓ மை காட்

குமார் laptop-பை எடுத்து பார்த்து அடுத்த போட்டோவை laptop-ல் காட்டுகிறான்

**குமார்** : சார் இத பாருங்க beautiful-ஆஇருக்கும்

**குமார்** : you love சார்

குமார் மறுபடியும் laptop-ல் உள்ள இன்னொரு போட்டோவை manager-ரிடம் காட்டுகிறான்

**manager** : utter waste

**குமார்** : உன் கண்ண தீப்பெட்டி வச்சு கொளுத்த,

**குமார்** : சார் இத பாருங்களே குமார் : இத பாருங்க ரொம்ப பிடிக்கும் சார் like it பாருங்க சார் எப்படி சார் சூப்பரா இருக்கு சார் பாத்தீங்களா சார்

**manager** : வே.....

குமார் தன் கைகளால் முகத்தை துடைக்கிறான்

**manager** : போட்டோவாடா எடுக்குற

manager அறிவை பார்த்து

**manager** : டேய் அறிவு.... அறிவு உள்ளவனா பாத்து friendship வச்சுக்க மாட்டியா

**manager** : நீ சொன்னேனுதானாடா அவன போட்டோகிராபரா வச்சுகிட்டேன்

**manager** : போட்டாவா எடுக்குறான்

**manager** : என் உயிர எடுக்குறான் டேய்

**manager** : போட்டோனா என்னன்னு தெரியுமாடா அத பாத்தா ஒரு கதை சொல்லனும் அதுல ஒரு life இருக்கனும் ஒரு ஜீவன் இருக்கனும்

**manager** : புரியுதா

**குமார்** : புரியுது சார்

**manager** : என்ன புரியுது சும்மா

manager குமாரிடம்
பேசிக்கொண்டிருக்கும் போது ரம்யா
கதவை திறந்து கையில் ஒரு pad-வுடன்
உள்ளே வருகிறாள்

**ரம்யா** : சார்

**ரம்யா** : 3rd page article
சொல்றேன்னு
சொன்னிங்களே என்ன ஆச்சு

ரம்யா தன் கண்களை சுழட்டி
அனைவரையும் பார்க்கிறாள்

**ரம்யா** : ஆ busy-யா இருக்கீங்களா

**manager** : ம் வா

**ரம்யா** : நானா

**manager** : உன்னதாம்மா

**manager** : வா

**ரம்யா** : வரனுமா வரவா

**manager** : உள்ள வா

**ரம்யா** : ம்

**manager** : கிட்ட வா

**ரம்யா** : ம்

**manager** : உன்னதான்

ரம்யா manager முன் இருக்கும் போட்டோவை பார்த்து

**ரம்யா** : wow சூப்பரா இருக்கு சார்

manager ரம்யாவின் தலையில் கொட்டுகிறார்

**manager** : இது சூப்பரா அறிவு இருக்கா உனக்கு

**ரம்யா** : அய்யோ அய்யோ

**manager** : நீயெல்லாம் என்ன படிச்சு இருக்க இந்த படம் நல்லா இருக்கா

**குமார்** : பசுக்கு புரியுது எறுமைக்கு புரியலையே

**manager** : கொஞ்சம் கூட manners இல்லாம உள்ள வர்ற 3rd page 4th page-னு உங்களயெல்லாம் வச்சுகிட்டு எப்படி நான் பத்திரிக்கை நடத்துறது பிச்சைதான் எடுக்கனும்

manager குமாரை பார்க்க, குமார் தனது செல்போனை நோண்டிக்கொண்டிருக்கிறான்

**manager** : டேய் அறிவு

**manager** : நான் இங்க எவ்வளவு கத்திக்கிட்டு இருக்கேன் அவன் என்ன பண்றான் பாரு

**குமார்** : இல்ல சார் whatsapp

**manager** : whatsapp, viber

**குமார்** : இல்ல சார்

**manager** : வாய மூடு

**manager** : இந்த லட்சணத்துலா bike வாங்க வேற loan கேக்குற loan-ம் கிடையாது ஒன்னும் கிடையாது

**manager** : போங்க போய் வேலைய பாருங்க

**[CUT]**

**SCENE NO : 7** **ROAD / EXT / DAY**

சாக்கடையில் helmet கிடக்கிறது

அந்த சாக்கடையில் நீரில் இருவர் போன் பேசும் காட்சி தெரிகிறது

**ஆண்** 1 : ஆ அண்ணே route-லதானே நிக்குறோம்
family-யோடதான் வர்றான்னு நினைக்குறேன்
ஆ ஒகேண்ணே முடிச்சுட்டு கூப்பிடுறோம் டேய் கிளம்பலாம்.

**ஆண்** 2 : ஓகே போகலாம்

போன் பேசி முடித்தவுடன் தலையில் ஹெல்மெட் அணிந்து கொண்டு bike-கை எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்புகின்றனர்.

ஒரு சாலையில் ஒருவர் தன் மனைவி குழந்தையுடன் bike-ல் வருகிறார்.

எதிரே போனில் பேசிய இருவரும் bike-ல் வருகின்றனர்.

இரண்டு bike-ம் அருகில் வரும் போது
ஹெல்மெட் அணிந்திருப்பவனின் பின்னால்
இருப்பவன் தன் கைகளால் எதிரே வரும்
bike-ல் இருக்கும் குழந்தையின் செயினை
பிடித்து இழுக்கிறான்

குழந்தை bike-ல் இருந்து பறந்து கீழே
விழுகிறது.

bike ஓட்டி வந்தவர் தன் மனைவியுடன்
நிலைதடுமாறி கீழே விழுகிறார்.

ஓடி வந்து தன் குழந்தையை தூக்குகிறார்.

செயின் அறுத்தவன் செயினை கையில்
சுத்தியபடியே பிந்திரும்பி பார்த்தபடியே bike-ல்
செல்கிறான்

**[CUT]**

## SCENE NO : 8 HOME / INT / NIGHT

St.thomas mount அறிவு வீட்டின் exterior shot.

அம்மா பூகட்டியபடியே t.v பார்த்துகொண்டிருக்கிறார்

அப்பா dinning table-ல் உட்காந்து சரக்கடித்து கொண்டிருக்கிறார்

அறிவு kitchen-ல் உள்ள water purifier-ல் தண்ணிர் பிடித்தபடியே dinning table-ல் அமர்ந்திருக்கும் அப்பாவை பார்த்து சைகையில் சிகரெட் கேட்கிறான்

**அறிவு** : அப்பா

**அறிவு** : ஒரே ஒரு தம் தாங்கப்பா

**துரை** : டேய் போடா

**அறிவு** : அப்பா ஒன்னே ஒன்னு தாப்பா

அப்பா அம்மாவை பார்த்துவிட்டு ஒரு சிகரெட்டை எடுத்து பாதியாக பிய்த்துவிட்டு ஒரு பாதியை அறிவிடம் நீட்டுகிறார்

அறிவு தண்ணிர் கொடுத்தபடியே அப்பா குடுத்த சிகரெட்டை எடுத்துபார்த்து

**அறிவு** : அப்பா என்னது இது

**துரை** : டேய் போடா

அறிவு அப்பாவிடம் இருக்கும் சிகரெட்டை பாக்கெட்டை எடுக்க பார்க்கிறான் அப்பா சிகரெட்டை பாக்கெட்டை தன் பக்கம் இழுத்துக்கொள்ள, சரக்கு பாட்டிலை எடுக்க பார்க்கிறான் அதையும் அப்பா தன்னிடம் எடுத்துகொள்கிறார்

**[CUT]**

**SCENE NO : 8A** **HOME / EXT / NIGHT**

அறிவு சிகரெட்டை எடுத்து வாயில் வைத்து பற்றவைக்கிறான்.

அறிவு புகையை இழுத்து விடும்போது அப்பா எதிரே வந்து நிற்கிறார்

புகை அவர் முகத்தின் மேல் படுகிறது

அப்பா glass-ல் இருந்த சரக்கை அடித்தபடியே

**துரை** : பெத்த அப்பன் மூஞ்சியிலயே புகை விடுறியேடா

**துரை** : ஒரு வேலைக்கு ஒன்னுதானா இல்ல வெளியுலலாம் கூடாவா

**அறிவு** : இப்படியே நீ பிச்சு பிச்சு கொடுத்திட்டே இரு பாக்கெட் பாக்கெட்டா அடிக்க போறேன் பாரு

அப்பா அறிவு காதை பிடித்து திருகுகிறார்

**துரை** : பிச்சுபுடுவேன் பிச்சு

**அறிவு** : சும்மா சொன்னேப்பா

அப்பா அறிவிடம்

**துரை** : அறிவு கடன் அதிகமாயிட்டா நிம்மதியா தூங்க முடியாதுப்பா.. நம்ம வீட்டுல வந்து ஒருத்தன் நின்னு நம்மள கேள்வி கேக்கக்கூடாது

**துரை** : duty-ல இருந்தப்பவும் சரி retired ஆனதுக்கு அப்பறமும் சரி யாருட்டயும் கை நீட்டி காசு வாங்குனது இல்ல

**துரை** : அதனாலதான் நம்ம குடும்பம் சந்தோஷமா இருக்கு.

**துரை** : பொண்டாட்டிகிட்ட permission வாங்கி வீட்டுலயே உட்காந்து ரெண்டு கட்டிங் போடுறதுக்கும் wine shop பாருல உட்காந்து தண்ணி அடிக்குறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு

**துரை** : இந்த credit card இந்த loan-னு இதெல்லாம் வேணாம்பா இதெல்லாம் ஆசை காமிச்சு ஆள ஏமாத்துற வேலை

**துரை** : கொஞ்ச நாள் ஆகட்டும்
fixed deposit-ல
கொஞ்சம் பணம் இருக்குப்பா
அத வச்சு மதிக்கு ஒரு
நல்ல bike-கா வாங்கி
கொடுத்துறலாம்

**துரை** : அதுக்குள்ள அவசரப்பட்டு
loan-னு கீன்னு
போயிடாதப்பா

**அறிவு** : சரிப்பா

**துரை** : அதெல்லாம் நமக்கு
சரிப்பட்டு வாரது

**அறிவு** : போதையில கூட நல்லா
பேசுறப்பா

**துரை** : அப்பனையே கலாய்க்குற
புள்ளைங்க ஆயிருச்சு இந்த
காலத்துல ம்

அறிவு சிரித்துக்கொண்டு

அறிவும் அப்பாவும் வீட்டிற்குள்
செல்கின்றனர்

**[CUT]**

**SCENE NO : 9** **COLLEGE CANTEEN / INT / DAY**

மதியும், மதியின் GF-ம் college mess-ல் சாப்பிட்டுகொண்டே

**மதி** : one month-ல அப்பா bike வாங்கி தாறேன்னு சொல்லி இருக்காரு

**காதலி** : one month-ல

**காதலி** : சரி one month-க்கு அப்பறம் வந்து என்ன கதை சொல்ல போற மறுபடியும் அதே கதையே சொல்லிடாத

**மதி** : இருக்கிறத வச்சு happy-யா இருக்க கத்துக்கோ

**காதலி** : இருக்குறத வச்சு… உன்கிட்ட அப்படி என்ன இருக்குன்னு என்ன happy-யா இருக்க சொல்ற

**காதலி** : இதுல அது இதுனு relationship வேற இதெல்லாம் எங்க போய் முடிய போகுதுன்னு எனக்கே தெரியல எனக்கு ஒரே confused-ஆ இருக்கு நான் class-க்கு போறேன்

மதியின் GF வெறுப்புடன் அங்கிருந்து
கிளம்புகிறாள்.

மதி யோசனையில் இருக்கிறான்

மதியின் பின்புறம் அமர்ந்து
சாப்பிட்டுக்கொண்டிக்கும் கணேஷ்
தனக்குள் சிரித்துக்கொண்டே மதியை
கடந்து செல்கிறான்

**[CUT]**

SCENE NO : 9A COLLEGE ROAD / EXT / DAY

college முடிந்ததும் வீட்டிற்கு
செல்வதற்காக மதி தோளில் college
பேக்குடன் college students நடுவே
யோசனையில் நடந்துவருகிறான்

[CUT]

**SCENE NO : 10** **ROAD / EXT / DAY**

மதி bus stop-ல் bus-ற்காக காத்திருக்கிறான்

கணேஷ் அங்கு தன்னுடைய
விலையுயர்ந்த bike-ல் ஹெல்மெட்
அணிந்து வருகிறான்.

மதியை பார்த்ததும் மதியின் அருகே
bike-கை நிறுத்தி மதியிடம்

**கணேஷ்** : என்ன மச்சான் bus-க்கு waiting-கா,
வீட்டுக்குதானே போற
உட்காரு நான் கூட்டிட்டு
போறேன்

**மதி** : இருக்கட்டும் மச்சான் நானே
போய்கிறேன்

**கணேஷ்** : நான் போற வழிதான் நானே
உன்ன drop பண்ணிறேன்
உட்காருடா

மதி கணேஷின் bike-ல் ஏறுகிறான்

**கணேஷ்** : போட்டா

**மதி** : ம்

மதி கணேஷிடம் பயணித்தபடியே
அவனுடன் பேசிக்கொண்டு வருகிறான்

**மதி** : உங்க அப்ப நீ என்ன கேட்டாலும் வாங்கி தருவாராடா

**கணேஷ்** : எங்க அப்பாவா அவரே corporation-ல வேலை செஞ்சுட்டு இருக்காரு அவருலாம் எப்படிடா வாங்கி தருவாரு

**மதி** : ஓ அப்ப part time job எதாவது பாக்குறியாடா

**கணேஷ்** : part time job-பா அந்த மாதிரி கூட சொல்லலாம்

**மதி** : ஏதாவது வேலை இருந்தா சொல்லுடா நானும் வந்து பாக்குறேன்

**கணேஷ்** : வேலையா உன் போக்கே சரியில்லையே

**மதி** : சரியோ தப்போ எதுவா இருந்தாலும் எனக்கு ஒரு bike வாங்கனும் அவ்வளவுதான்

**கணேஷ்** : bike தானே ஓகே

மதி கணேஷும் கூட்டம் சற்று கம்மியாக இருக்கும் ரோட்டில் வந்து கொண்டிருக்கிறார்கள்

அங்கு சாலையோரம் இருக்கும் கடையில் ஒரு பெண்மணி பழம் வாங்கிக்கொண்டிருக்கிறாள்

**குரல்** : 50 ரூபாம்மா

**பெண்** : offபிள் 1 kg போடுங்க அது எவ்வளவு ஆகுது

**குரல்** : நல்ல பழம்தான் வாங்கிக்கங்க

**பெண்** : அப்படியா

கணேஷ் எதிர்பாராத நேரத்தில் அப்பெண்மணியின் கழுத்தில் இருக்கும் செயினை அறுக்கிறான்

**பெண்** : டேய்

**பெண்** : டேய் டேய்

மதி அதை கண்டு அதிர்ச்சியடைகிறான்

மின்னல் வேகத்தில் இருவரும் அங்கிருந்து மறைகின்றனர்

**[CUT]**

**SCENE NO : 11** **OFFICE / INT / DAY**

அறிவு office-ல் டீ குடித்துபடியே டி.வி.யில் கடத்தல் தங்கம் பற்றி ஓடிக்கொண்டிருக்கும் செய்தியை பார்க்கிறான்

**news** : சென்னை விமான நிலையத்தில் துபாயில் இருந்து கடத்தி வரப்பட்ட 5 கிலோ தங்க கட்டிகளை சுங்கதுரை அதிகாரிகள் கைப்பற்றினர் இந்த மாதத்தில் மட்டும் சுமார் இருநூறு கிலோ கடத்தல் தங்கத்தைஅதிகாரிகள் கைப்பற்றினர்

ரம்யா விசிலடித்து சைகை பாஷையில் டி,வி பார்த்துக்கொண்டிருக்கும் அறிவை அழைக்கிறாள்

**ரம்யா** : ஹாய்

**news** : இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவதால் நாட்டின் பொருளாதாரம் பெரும் அளவு பாதிக்கப்படுகிறது

**news** : கருப்பு சந்தையில் பதுக்கப்படும் தங்கத்தை பிடிப்பதற்காக தனிப்படை அமைக்கப்பட்டுள்ளதாக காவல்துரை அதிகாரி சக்திவேல் தெரிவித்துள்ளார் மேலும் அவர் கூறுகையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் தங்கத்தால்தான் நிர்ணயிக்கப்படுகிறது இந்தியாவில் மட்டும் பல ஆயிரம் தங்கம்

கையில் ஒரு சின்ன பொருளை எடுத்து அறிவு மீது எறிகிறாள் அறிவு அவளை திரும்பி பார்க்கிறான்

**ரம்யா** : hey you where is your mind

**news** : கருப்பு சந்தையில் பதுக்கப்பட்டு உள்ளது வருத்தம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்

**ரம்யா** : manager is calling meeting சீக்கிரம் வா

**[CUT]**

**SCENE NO : 12** **HOME / EXT / NIGHT**

கணேஷின் bike மதியின் வீட்டின் முன் வந்து நிற்கிறது

மதி bike-ல் இருந்து இறங்குகிறான்

கணேஷ் மதியிடம்

**கணேஷ்** : மச்சி இந்த உலகத்துல
எல்லாமே இருக்கு
நம்மளுக்கு தேவையானத
நம்மதான் எடுத்துக்கனும்
புரியுதா part time
job-பான்னு கேட்டல்ல
இதான் part time job

**கணேஷ்** : safe and easy

**கணேஷ்** : என் mobile பார்த்தல்ல
இத வச்சு அந்த மாதிரி
ரெண்டு apple வாங்கலாம்
புரியுதா நாளைக்கி
பாக்கலாம்

கணேஷ் அங்கிருந்து கிளம்ப மதி குழம்பியபடியே படிகளில் ஏறுகிறான்

**[CUT]**

**SCENE NO : 12A** **HOME / INT / NIGHT**

மதி அவன் அறையில் யோசித்தபடியே bed-ல் அமர

அம்மா

**ஜெயா** : டேய் dress change பண்ணிட்டு வாடா சாப்பிடலாம்

**மதி** : இதோ வர்றேன்மா

**[CUT]**

**SCENE NO : 13** **HOME / INT / NIGHT**

அப்பா, அறிவு, குமார் ஒரு அறையில் பேசிக்கொண்டிருக்கின்றனர்

**துரை** : எதுக்குப்பா மாலைலாம்

**அறிவு** : அப்பா உன் கல்யாணத்த நாங்க பாத்தோமா

**துரை** : அதுக்கு

**அறிவு** : இல்லல்ல

**அறிவு** : இப்ப பாக்க போறோம்

**குமார்** : அப்பம் கல்யாணம் முடிச்ச கையோட straight டா honeymoon-தான்

**துரை** : honeymoon கூட உண்டா

**குமார்** : அய்ய வாய பாத்தியா இவருக்கு, retired ஆன போலீஸ்சுக்கு எதுக்கு daddy revolver

**துரை** : நான் duty time-ல கூட revolver use பண்ணலையேடா

**குமார்** : சரியான் tubelight

அறிவும் குமாரும் சிரிக்க

அப்பா அவர்களை

**துரை** : அடி செருப்பால

சிரித்துக்கொண்டு அடிக்க அறிவும் குமாரும் அறையை விட்டு வெளியே ஓடுகின்றனர்

வீடு முழுவதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது

அப்பாவும் அம்மாவும் மாலை மாற்றிக்கொள்கின்றனர்

அறிவு குங்குமச்சிமிழை எடுத்து அப்பாவிடம் நீட்டுகிறான்

**அறிவு** : அப்பா அம்மாக்கு வையுங்கப்பா

அப்பா அதிலிருந்து குங்குமத்தை எடுத்து அம்மாவின் நெற்றியில் வைக்கிறார்

குமார் ஆசிர்வாதம் வாங்க அம்மா அப்பாவின் காலில் விழுகிறான்

**குமார்** : munny daddy என்ன wishing பண்ணுங்க

குமார் அப்பா அம்மாவிற்கு gift கொடுக்கிறான்

**ஜெயா** : ஏய் ஏய் ஏய்

**துரை** : ஏய்

**குமார்** : அய் இதோ இருக்கு

**ஜெயா** : எதுக்குடா இதெல்லாம்

**குமார்** : பாரவாயில்ல mummy எனக்கு நீங்க மட்டும்தானே

அம்மா குமார் நெற்றியில் முத்தமிடுகிறாள்

**அறிவு** : இரண்டு எழுத்துக்கள் பொறித்த செயினை அம்மாவிற்கு பரிசாக அளிக்கிறான்

**அறிவு** : டொன்ட்டொய்ன்

**குமார்** : டேய் இது எப்படா வாங்குன

**ஜெயா** : டேய்

**குமார்** : சொல்லவே இல்ல

**குமார்** : fantastic

**குமார்** : வாவ்

அம்மா அதை மகிழ்ச்சியுடன் பார்க்கிறாள்

அறிவு அம்மாவிடம் இரண்டு
எழுத்துக்களையும் சுட்டிக்காட்டி

**அறிவு** : அம்மா இது மதி இது நான்

**ஜெயா** : ஓ

**துரை** : ஏய் அப்ப நான்

**அறிவு** : அப்பா நீதாப்பா செயினே

மதி upset ஆக இருக்கிறான்

அம்மா அறிவிடம்

**ஜெயா** : டேய் என்னடா அந்த பைசால இவனுக்கு bike தானே வாங்குறன்னு சொன்ன

**அறிவு** : அம்ம எனக்கு loan கிடைக்கல அப்பாவே வாங்கி தர்றேண்ட்டாரும்மா

**அறிவு** : ஓகேல்ல

**மதி** : no problem

அப்பா அம்மாவின் கழுத்தில் செயினை அணிவிக்கிறார்.

அறிவும் குமாரும் party poppers வெடித்து உற்சாகமாக இருக்கின்றனர்.

மதி அங்கிருந்து மனம் வெறுத்தபடி தன் அறைக்கு செல்கிறான்.

**[CUT]**

**SCENE NO : 13A** **HOME / INT / NIGHT**

மதி தன் அறைக்கு சென்று தன்
ஆற்றாமையையும் கோபத்தையும்
தனக்குத்தானே
வெளிப்படுத்திக்கொள்கிறான்

**[CUT]**

**SCENE NO : 14** **HOME / EXT / DAY**

அப்பா கண்ணாடியை பார்த்து shaving cream-மை முகத்தில் தடவி கொண்டிருக்கிறார்

அம்மா துணிகளை பிழிந்து கொடியில் காயப்போட்டுகொண்டிருக்கிறாள்

மதி அங்கு வருகிறான்

மதி அம்மாவிடம்

**மதி** : அம்மா அண்ணே எங்கம்மா

**ஜெயா** : அண்ணனுக்கு என்னமோ வேலை இருக்குன்னு காத்தாலயே கிளம்பி office-க்கு போயிட்டாண்டா நீ bus-ல போயிக்கோப்பா

மதி கோபமாக அப்பாவிடமும் அம்மாவிடமும்

**மதி** : என்னது bus-ல போனும்மா என்னால முடியாது எத்தன தடவை சொல்றது உங்களுக்கு

அப்பா மதியிடம்

**துரை** : டேய் என்னடா ஓவரா பேசுற என்னாச்சு உனக்கு bus-ல போனா என்ன

**மதி** : அந்த இத்து போன வண்டியில கசக்குன குப்பை மாதிரி என்னால போக முடியாதுப்பா

**மதி** : அதுக்குதான் புது bike வாங்கி கொடுங்கன்னு கேக்குறேன்

**துரை** : ஆமாண்டா நீ போனா ஒன்ற லட்ச ரூபா bike-குலதான் போவ இல்ல.. உங்க அண்ணன் வச்சு இருக்கானே bike-கு அந்த மாதிரி வேணும்னா சொல்லு உடனே வாங்கி தர்றேன்

**மதி** : அந்த மாதிரி மொக்க bike-லலாம் என்னால போக முடியாது எனக்கு நான் கேட்ட bike-தான் வேணும் வாங்கி தர்றிங்களா மாட்டீங்காளா

**ஜெயா** : ஒரேடியா ஒன்ற லட்ச ரூபா bike-குனா எப்படிடா வாங்க முடியும்

**மதி** : ஏன் அறிவுதான் செயின் வாங்கி கொடுத்தான்ல அத வச்சு வாங்கி கொடுங்க

அப்பா கோபமாக மதியிடம்

**துரை** : ஏய் என்னடா பேசுற, எங்க கத்துகிட்ட இதெல்லாம் பிச்சுருவேன் ராஸ்கல்

அம்மா அப்பாவை பார்த்து

**ஜெயா** : ஏங்க

**துரை** : என்னடி இப்படி பேசுறான் இவன்

**மதி** : நான் கிளம்புறேன்மா

**ஜெயா** : டேய் டிபன் சாப்பிட்டு போடா

மதி கோபமாக college பேக்கை எடுத்துக்கொண்டு வீட்டில் இருந்து கிளம்புகிறான்

அம்மா அப்பாவிடம்

**அம்மா** : என்னங்க இவன், பேசாம அவன் கேக்குற bike-கே வாங்கி கொடுத்துறலாமா

**துரை** : ஏய் அறிவுக்கெட்டதனமா பேசாத

அப்பா shaving cream-மை முகத்தில் தடவிக்கொண்டே அம்மாவிடம்

**துரை** : பெத்தவங்க பிள்ளைங்களோட ஆசைய நிறைவேத்தலாம் ஆனா பேராசையை நிறைவேத்தக்கூடாது அப்பறம் அதுவே நாம அவங்களுக்கு காட்டுற தப்பான வழி ஆயிடும் கொஞ்ச நாள் போச்சுனா அவனுக்கே பக்குவம் வந்துரும்

**[CUT]**

**SCENE NO : 15** **CLASSROOM / INT / DAY**

Classroom-ல் மதி ஒரு பேப்பர் எடுத்து கணேஷ் முன் table-ல் போடுவது

**கணேஷ்** : என்னடா இது

கணேஷ் அதை பிரித்துப்பார்க்கிறான்

கணேஷ் பேப்பரில் எழுதியிருப்பதை படிக்கிறான்

**கணேஷ்** : I phone, I pad, radio watch, nike shoe, ktm bike

**மதி** : எனக்கு இதெல்லாம் வேணும்

**மதி** : நீ கூட வர்றியா இல்ல நானே பாத்துக்கிட்டுமா

கணேஷ் பேப்பரை மடித்துவிட்டு மதியை பார்த்து சிரித்துக்கொண்டே

**கணேஷ்** : welcome to my world

**[CUT]**

**SCENE NO : 15A** **ROAD / EXT / DAY**

மதி தன் பாக்கெட்டில் இருந்து
kerchief-பை எடுத்து முகத்தை மறைத்து
கட்டுகிறான்

கணேஷ் ஹெல்மெட் அணிகிறான்

Bike அங்கிருந்து நகர்கிறது

**[CUT]**

**SCENE NO : 15B** **STREET / EXT / DAY**

ஒரு தெருவில் காய்கறி விற்பவன் வண்டியை தள்ளிக்கொண்டு செல்ல கணேஷ் bike அந்த தெருவில் வந்து நிற்கிறது

கணேஷ் bike-ல் அமர்ந்திருக்க மதியை பார்த்து

Bike-ல் அமர்ந்தபடியே கணேஷ் மதியிடம்

**கணேஷ்** : இங்க பாரு மச்சி செயின் அடிக்குற மாதிரி ஈஸியான ஒரு crime-மே கிடையாது நம்ம அத மாட்டாம பண்ணனும் இதுக்கு ரெண்டு விஷயம் ரொம்ப முக்கியம்

**கணேஷ்** : ஒன்னு இடம் இன்னொன்னு அடிக்க போற ஆள் நம்ம எங்க அடிக்க போறோமோ அந்த ஏரியாவுல சந்து பொந்து எல்லாத்தையும் மக்கப் பண்ணி வச்சுக்கனும்

**கணேஷ்** : நம்ம செயின் அடிக்க போற பொம்பளைங்க loose hair-ல இருக்கவே கூடாது. ஒன்னு ஜடை போட்டு இருக்கனும் இல்ல அந்த மாதிரி கொண்டை போட்டு இருக்கனும். அப்பதான் சிக்காம செயின் அடிக்க முடியும்

ஒரு பெண்மனி கையில் கூடையுடன் கேட்டை திறந்து தெருவில் காய்கறி வாங்க வருகிறாள்

**கணேஷ்** : அங்க பாரு அந்த aunty-யதான் ரெண்டு நாளா track பண்ணி வச்சுருக்கேன்

அப்பெண்மணி காலில் heels செருப்பு அணிந்திருப்பதை பார்த்து கணேஷ் மதியிடம்

**கணேஷ்** : அடிச்சதுக்கு அப்பறம் துரத்தாம இருக்கறதுக்கு heels போட்ட பொம்பளைங்களையா பாத்து select பண்ணனும்

அப்பெண்மணி காய்கறிகளை எடுத்து பார்க்கிறாள்

**கணேஷ்** : நம்ம அடிக்கப்போற ஆளோட முழு கவனுமும் எது மேலயாவது இருக்கனும் அப்பதான் clean-னா பண்ண முடியும்.

அப்பெண்மணி காய்கறி விற்பவனிடம் பேசிக்கொண்டிருக்கிறாள்

**கணேஷ்** : இனிமே இதுதான் உன் life

**கணேஷ்** : ஓகேவா ready

கணேஷும் மதியும் அப்பெண்மணியை நோக்கி bike-ல் வருகின்றனர்

அப்பெண்மணி அவர்களை கவனிக்காமல் காய்கறி விற்பவனிடம் பேசிக்கொண்டிருக்கிறாள்

மதி அப்பெண்மணியை உற்று பார்க்கிறான்

அப்பெண்மணியின் அருகில் வந்ததும் bike-ல் பின்னாடி இருக்கும் மதி தனது கையை அப்பெண்ணின் கழுத்தை நோக்கி நீட்டுகிறான்

கண்ணிமைக்கும் நேரத்தில் அப்பெண்ணின் கழுத்தில் இருக்கும் செயினை அறுக்கிறான்

காய்கறி விற்பவன் மதியையும்
கணேஷையும் துரத்துகிறான்.

அப்பெண்மணி தனது வீட்டிற்குள்
ஓடுகிறாள்

மதி அறுத்த செயினை பார்க்கிறான்

கணேஷ் மதியை தட்டிக்கொடுக்கிறான்

**[CUT]**

## SCENE NO : 15C GOLD MELTING PLACE / EXT / NIGHT

bike ஒரு godown முன்வந்து நிற்கிறது

குடோனின் கதவை திறந்து வவ்வால் என்பவன் ஒரு juice-யை straw போட்டு உறிஞ்சபடியே வருகிறான்

வவ்வால் கணேஷிடம்

**வவ்வால்** : என்ன கணேசு எப்படி இருக்குற

**கணேஷ்** : average-தானே இருக்குறேன்

**வவ்வால்** : யாரு இந்த இறா மூஞ்சி

**கணேஷ்** : இறாவா friend-ணா

**வவ்வால்** : ஓ fresher-றா welcome welcome

**வவ்வால்** : எத்தன முழம்

**கணேஷ்** : ஒரு 10 - 12 தேறும்ணா

**வவ்வால்** : இந்தா பாரு கணேஷூ separate-ஆ business பண்றது நல்லாயில்ல எதுவா இருந்தாலும் குணா அண்ணாகிட்ட dealing வச்சுக்க

**கணேஷ்** : என்னண்ணா நம்ப மாட்ற

வவ்வால் பேசும்போது straw அவ்வப்போது வாயில் வைத்து உறிஞ்சுகிறான்

கணேஷ் போனில்

**கணேஷ்** : ஆ அண்ணெ வவ்வால பாக்க வந்தேண்ணே

**கணேஷ்** : இல்ல கூட புதுசா ஒரு பையன் வந்தான் அதெல்லாம் எதுவும் இல்லண்ணே எனக்கும் கம்பெனி இருக்கும்

**கணேஷ்** : நல்ல பையன்தானே அவன் அதெல்லாம் எதுவும் இல்லண்ணே

**கணேஷ்** : நான் கூட்டிட்டு வர்றேன் அவன சரிண்ணே கொஞ்சம் சொல்லுங்கண்ணே ஆ

வவ்வால் மதியின் கன்னத்தில் தட்டுகிறான்

மதி பயந்தாற்போல் வவ்வாலை பார்க்கிறான்

கணேஷ் போனை வவ்வாலிடம்
கொடுக்கிறான், வவ்வால் போனை காதில்
வைத்து பேசுகிறான்

**வவ்வால்** : அண்ணா வணக்கம்ணா புது மூஞ்சினாலதான் doubt

**வவ்வால்** : ஆ ஓகேண்ணே ஓகேண்ணே

**வவ்வால்** : அவ்வளவுதான் matter solve

மதி kerchief-உடன் செயினை
வவ்வாலிடம் கொடுக்கிறான்

வவ்வால் kerchief-லிருந்து செயினை
எடுத்துப்பார்த்து கணேஷிடம்

**கணேஷ்** : ஏய் அத கொடுறா

**வவ்வால்** : எவ்வளவு சொன்ன

**கணேஷ்** : பத்து பண்ணிரண்டு தேறும்

**வவ்வால்** : ஏழ்ட்ரை(71/2) ஏழு புள்ளி ஒன்பது (7.9) தேறும்

**வவ்வால்** : இங்கயே wait பண்ணு பாத்துட்டு வர்றேன்

வவ்வால் kerchief-யை மதியிடம்
எறிந்துவிட்டு உள்ளே செல்கிறான்.

வவ்வால் போனதும் மதி கணேஷிடம்

**மதி** : டேய் யாருடா இவன்

**கணேஷ்** : நீ நினைக்குற மாதிரி திருட்டு நகைலாம் அவ்வளவு அசல்டா விக்க முடியாதுடா அதுக்கு ஆள் வேணும் அதுக்கு இந்த குரூப்தான் முப்பதுல இருந்து நாப்பது % அவங்க எடுத்துப்பாங்க மிச்சத்த தான் நமக்கு தருவாங்க இந்த ஊர்ல இருக்குற எல்லா திருட்டு நகையும் இவன்கிட்ட தான் வந்து சேரும் ஆனா இத எப்படி காசு ஆக்குறாங்கன்ற விஷயம் நம்மளுக்கு தெரியாது

**மதி** : மச்சான் இதையே நம்ம பண்ணா செம்ம காசு பாக்கலாம்டா

**கணேஷ்** : டேய் சும்ம இருடா எவனாவது கேட்டுற போறான்

கணேஷும் மதியும் பேசிக்கொண்டிருக்கையில் விலையுயர்ந்த car ஒன்று வந்து அங்கு நிற்கிறது.

காரிலிருந்து மின்னல் சேகரும் அவனது அடியாளும் இறங்குகின்றனர்

மின்னல் சேகர், கணேஷை பார்த்து

**ஆண்** : என்னப்பா யார் இது

**கணேஷ்** : என் friend-தாண்ணே

மின்னல் சேகர் தன் அடியாளிடம்

**ஆண்** : டேய் குணாகிட்ட பேசு புது மூஞ்சிகளா வருது ஒன்னும் சரி இல்ல

மின்னல் சேகரும் அவனது அடியாளும் கேட்டை திறந்து உள்ளே செல்கின்றனர்

மதி கணேஷிடம்

**மதி** : யாருடா இவன்

**கணேஷ்** : இந்த business ,gang group எல்லாம் அவர் control-ல்லதாண்டா இருக்கு

**மதி** : டேய் எப்படிடா உனக்கு இவ்வளவு பெரிய link

**கணேஷ்** : எல்லாம் குணா link-குதாண்டா நாளைக்கு உன்ன கூட்டிட்டு போவேன்ல அப்ப பாப்ப

வவ்வால் திரும்பி வந்து கணேஷிடம்

**வவ்வால்** : கணேசு பழைய balance commission batta-லாம் போக ஒரு லட்ச ரூபாதான் தேறும்

**கணேஷ்** : சரி பரவாயில்ல கொடுண்ணா

**வவ்வால்** : take it

வவ்வால் பணத்தை கொடுத்துவிட்டு மதியின் கன்னதில் தட்டுகிறான்

**வவ்வால்** : இறா மூஞ்சி வரட்டா meeting next time

**மதி** : ஆ ஓகே

வவ்வால் உள்ளே செல்கிறான், கணேஷ் ஹெல்மெட் அணிந்து bike-கை start செய்து அங்கிருந்து கிளம்புகிறார்கள்

**[CUT]**

**SCENE NO : 15D** **HOME / EXT / NIGHT**

bike மதியின் வீட்டின் அருகில் நிற்கிறது

கணேஷ் பணத்தை மதியிடம்
கொடுத்துவிட்டு

**கணேஷ்** : மச்சான் first attempt-ஏ
சூப்பரா பண்ணடா இந்தா
மொத்த காசையும் நீயே
வச்சுக்கோ ஓகே நாளைக்கு
உன்ன குணாகிட்ட கூட்டுட்டு
போறேன் bye

மதி பணத்தை வாங்கிகொண்டு college
பேக்கை முதுகில் போட்டபடி
சிரித்துக்கொண்டே வீட்டை நோக்கி
நடக்கிறான்

கணேஷ் bike-ல் அங்கிருந்து
கிளம்புகிறான்

**[CUT]**

**SCENE NO : 15E** **HOME / INT / NIGHT**

அவன் ரூமில்லுள்ள bed-ல் உட்கார்ந்து
பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து
அதை நுகர்ந்து பார்க்கிறான்.

**[CUT]**

**SCENE NO : 16** **OFFICE / INT / DAY**

Office-ல் அறிவு computer-ல் மதிக்கா bike பார்த்துக்கொண்டிருக்கிறான்.ரம்யா அதை கவனித்து அறிவிடம்

**ரம்யா** : K.T.M bike வாங்க போறியா

**அறிவு** : தம்பிக்கு

**ரம்யா** : அம்மாக்கு செயின் தம்பிக்கு bike

அறிவு, ரம்யாவை குழப்பத்தோடு பார்க்கிறான்

**ரம்யா** : என்ன… குமார் சொல்லிட்டான்

**ரம்யா** : உன் அம்மா அப்பா anniversary-கு என்ன கூப்ட்டியா ஓகே என்னைக்காவது என்ன வீட்டுக்கு கூப்டு இருக்கியா

அறிவு குமாரை பார்த்துக்கொண்டே

**அறிவு** : you know right குமாருக்கு யாரும் இல்ல சின்ன வயசுல இருந்தே என் கூடதான் இருந்தான் நாங்கதான் அவனுக்கு எல்லாமே avoid-லாம் பண்ண முடியாது எதுவா இருந்தாலும் அவனே வந்துருவான்

அங்கே குமார் கேமராவில் போட்டோ எடுத்து அதை மேனேஜரிடம் காட்டுகிறான். manager அதை பார்த்துவிட்டு குமாரை தலையில் குட்டுகிறார்

**manager**: போடா போய் ஒழுங்கா எடு போடா

manager குமாரை மறுபடியும் போட்டோ எடுக்க சொல்லிவிட்டு போட்டோக்கு போஸ் கொடுக்கிறார்

ரம்யா அறிவிடம்

**ரம்யா** : present-ல past-ஆ பத்தி மட்டும் நினைக்காதீங்க mr. அறிவழகன் future-ஆ பத்தியும் கொஞ்சம் யோசியுங்க

**அறிவு** : என்ன வீட்டுக்குதானே கூட்டிட்டு போறேன்

ரம்யாவின் அருகில் இருப்பவன் ரம்யாவை அளைக்கிறான்

**ஆண்** : ஏய் ஏய்

**ரம்யா** : என்ன

**ஆண்** : அடுத்த வாரம் எங்க ஆயா தாத்தாக்கு anniversary வீட்டுக்கு வர்றியா

ரம்யா அவனை பார்த்து அவனிடம் ஒரு சிறிய கத்தியை காட்டி

**ரம்யா** : ஏத்தட்டுமா இல்ல இறக்கட்டுமா.

**[CUT]**

**SCENE NO : 17** **GUNA PLACE / INT / DAY**

City கடலுடன் கூடியா atmosphere shot

கணேஷும் மதியும் குணாவின் இடத்திற்க்கு வருகின்றனர்

மதி கணேஷிடம்

**மதி** : டேய் குணாக்கு என்ன பிடிக்குமாடா

**கணேஷ்** : டேய் நீங்க என்ன லவ்வா பண்ண போறீங்க வாடா

கணேஷும் மதியும் உள்ளே செல்கின்றனர்

உள்ளே ஒருவன் கஞ்சா இழுக்க தயாராகிறான், கணேஷ் அவனிடம்

**கணேஷ்** : என்னண்ணா fine-னா

**கணேஷ்** : காலையிலயே ஆரம்பிச்சுட்ட

**கணேஷ்** : வா வா நம்ம இடம்

கணேஷும் மதியும் உள்ளிருக்கும் அறைக்கு வருகின்றனர்

மதி அந்த இடத்தை ஆச்சர்யம் கலந்த பயத்தோடு பார்க்கிறான்

படுத்த படுக்கையாக இருக்கும் ஒரு வயதான பெரியவர் கணேஷிடம்

**கீரல்-மணி**: என்ன கணேஷு யார் இது

**கணேஷ்** : friend-ணா புதுசு

**கீரல்-மணி:** ஓ new comer - ஆ

**கீரல்-மணி**: பாத்தாலே தெரியுது, திருட்டு மூஞ்சி

மதி கணேஷிடம் அவர் யார் என்று கேட்க

**மதி** : டேய் யாருடா இவரு

**கணேஷ்** : அவருதாண்டா கீரல்மணி

**கணேஷ்** : கீரலுக்கு ரொம்ப famous யாருகிட்ட அடிச்சாலும் அவரு அடையாளமா ஒரு கீரல் போட்டுட்டு வந்தருவாரு

**மதி** : இப்ப என்னடா ஆச்சு

**கணேஷ்** : ஆளு கஞ்சா அடிச்சு அடிச்சு உடம்புலாம் நஞ்சு போச்சு இப்ப நவுற முடியாம ஒரே இடத்துல உட்காந்துருக்குது குணாவோட close friend அதனாலதான் இப்பயும் வச்சு maintain பண்ணிட்டுருக்குது

கீரல் மணியின் வாயின் இடது புறமும் வலது புறமும் ஒரு pipe இருக்கிறது, ஒன்று புகைபிடிப்பதற்காக மற்றொன்று juice குடிப்பதற்காக

**கணேஷ்** : நீ இங்கயே இரு நான் உள்ள போய் குணாவ பாத்துட்டு வர்றேன்

**மதி** : பாத்துடா

கணேஷ் மதியை அங்கேயே விட்டுவிட்டு உள்ளே செல்கிறான்

**கணேஷ்** : அண்ணா friend சொன்னேன் இல்லண்ணா கூட்டிட்டு வந்துருக்கேன்ணா

குணாவின் வாயில் சுருட்டு இருக்கும் shot

**கணேஷ்** : நேத்து கூட வந்துருந்தான்ணா நல்லா பண்றான்ணா எனக்கே
first மூணு வாட்டி
slip ஆயிடுச்சு இவன்
first attempt-ஏ நல்லா பண்ணிட்டான்ணா நானும் தனியாதானே இருக்கேன்
எனக்கும் company வேணும்ல அதனாலதான்னா கூட்டிட்டு வந்தேன்

புகையுடன் குணா கண்களை திறக்கும் shot

**குணா** : நீ பாத்து ஓகேன்னு சொன்னா கூட வச்சுகுறேன்ணா நம்பிக்கையான பையன்னா

Bgm starts

குணா கையில் ஒரு lighter-உடன் ஒரு நூல் திரையை விலக்கிவிட்டபடியே மதியை நோக்கி வருகிறான் (out of focous to shift focus shot)

குணா lighter-ன் மூடி திறந்தபடியே வாயில் சுருட்டுடன் மதியின் அருகில் வருகிறான்

மதி பயந்தபடியே குணாவை பார்க்கிறான்

குணா மதியிடம்

**குணா** : நல்லா பண்றீயாமே ம் சொன்னான் நான் கேக்குறதுக்கு மட்டும் correct-ஆ பதில் சொல்லு கிட்டதட்ட interview தான். Thief-க்கும் robber-க்கும் என்ன வித்தியாசம்

குணா கணேஷை பார்க்கிறான்

**மதி** : A thief usually steals secretly and the victim usually becomes aware of the thief only after something has been stolen a robber not only usually seen by the victim but also other injures the victim

குணா துப்பிவிட்டு கணேஷிடம்

**குணா** : டேய் நான் எல்லாம்
english பேச
ஆரம்பிச்சேன்னு வையி
இவன் எல்லாம் english
tuition போனாலும்
புரியாது

குணா மதியிடம்

**குணா** : ஒருத்தன் ரெயில்வே
ஸ்டேஷன்ல போன் பேசிட்டு
இருக்கும் போது திடீர்னு
அவன் பெட்டிய காணோம்

**குணா** : பெட்டிய காணோம் சார்
அய்யோ என் பொட்டி
பொட்டி பொட்டி

**குணா** : என் பொட்டி பொட்டி
போலீஸ் போலீஸ்
போலீஸ் போலீஸ்
போலீஸ் போலீஸ்

**குணா** : அப்படி அவனுக்கு தெரியாம
ஒருத்தன் பொட்டிய
தூக்குறான் பாத்தியா அது
thief

**குணா** : அய்யோ சார் கத்தி
அய்ய்ய்யோ வேணா வேணா
வேணா

**குணா** : அய்யோ சார் கத்தி அய்யய்யோ வேணா சார் நான் புள்ள குடிகாரன் சார்

**குணா** : வேணா சார் சார் செயின் செயின்

**குணா** : செயின் வாட்ச் வாட்ச் எடுத்துக்கோங்க சார்

**குணா** : இப்படி ஒருத்தன மிரட்டி புடுங்குறான் பாத்தியா அது robber

**குணா** : இந்த ரெண்டுக்கும் நடுவுலதான் நம்ம

மதி கணேஷை பார்க்கிறான்

குணா அவனுடைய chair-ல் சென்று அமர்கிறான்

செயின் பறிக்கும் மற்றுமொரு நான்கு பேர் அங்கு வருகிறார்கள்

குணா lighter-ஆல் சுருட்டை பற்ற வைக்கிறான்

குணா மதியிடம்

**குணா** : வர்றாங்க பார் my boys

மதி அவர்களை பார்க்கிறான்

நால்வரும் உள்ளே வருகின்றனர்

அதில்இருவர் முன்னே ஒரு குழந்தையின் கழுத்தில் இருந்து செயின் பறித்தவர்கள் (revealing shot) நால்வரும் குணா அருகே வந்து நிற்கின்றனர்

குணா அந்த நால்வரையும் பார்த்து

**குணா** : வவ்வால் போன் பண்ணான் போன வாரம் 52 இந்த வாரம் 48

குணா அவர்களிடம்

**குணா** : பத்தாது improve பண்ணனும்

**ஆண்1** : next week அறுபது பவனுக்கு target பண்ணி இருக்கோம்ணே

**குணா** : இவனும் உங்கள மாதிரிதான் திருட்டு கோட்டாவ try பண்றான்

**குணா** : கூட்டிட்டு போய் train பண்ணுங்க

குணா chair-ல் அமர்ந்தபடியே மதியிடம்

**குணா** : rules எல்லாம் சொன்னான்ல correct-ஆ follow பண்ணனும்

**குணா** : loose hair-ரு jeans pant கை வைக்கக்கூடாது

**குணா** : போலீஸ்சு பஞ்சாயத்துன்னு வந்தா torture பண்ணி விசாரிப்பாங்க

**குணா** : வீட்டுல i-phone கேட்டேன் பாக்கெட் மணிக்கு காசு தரல இப்படி ஏதாவது சொல்லி s ஆயிறனும் அத விட்டுட்டு குணாண்ட்டு ஒருத்தன் இருந்தான் plan போட்டான் திருடுன நகையெல்லாம் அவன்கிட்ட கொடுப்போன்னு சொன்ன எனக்கு எப்படி s ஆகுறதுன்னு தெரியும் ஆனா நீ கண்டம் ஆயிடுவ

குணா மதியை அருகே அழைத்து மதியின் விரலை உற்று பார்த்து அவனது கையைவிடுகிறான்

**குணா** : முதல்ல nails-ச கட் பண்ணு அப்பறம் செயின் அறுக்கும் போது லேடீஸ் கழுத்துல கீறல் விழும் அது பாவம் லேடீஸ் எல்லாம் god மாதிரி கொடுக்குற தெய்வம் crime பண்ணாலும் காம்மா பண்ணனும்

குணா மதியிடம்

**குணா** : உனக்கு ஹிட்லர் பிடிக்குமா காந்தி பிடிக்குமா

**மதி** : காந்தி தாத்தாதான் பிடிக்கும்

**குணா** : ஏன்

**மதி** : பணத்துல அவரோட மூஞ்சிதான் இருக்கு

குணா சிரித்துக்கொண்டே கீரல் மணியிடம்

**குணா** : என்ன கீரல் பாத்தியா அவன

**கீரல்-மணி**: ஆமாப்பா he is a smart boy

குணா மதியிடம்

**குணா** : correct பணம்தான் பணம் மட்டும்தான் முக்கியம் பணம் இருக்குறவன் கிட்டதான் இந்த உலகம் அடிமையா இருக்கும்

**குணா** : நீ அடிமையா இருக்க போறியா அடிமையா ஆக்க போறியா

**[CUT]**

**SCENE NO : 18** **SONG / INT, EXT / DAY, NIGHT**

Song starts (பூமி யாருக்கும்...)

Song-ல் மதியின் development (montage)

**[CUT]**

**SCENE NO : 19** **SUBWAY / EXT / NIGHT**

ஒரு பெண் அவளின் பின்னால் வருபவனிடம்

**பெண்** : வேணாம் பின்னாடி வராத உன் மூஞ்சிய பாத்தாலே எனக்கு பிடிக்கல வாந்தி வருது

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது அவர்களை ஒரு bike கடக்கிறது

**ஆண்** : உன் அப்பன் கொய்யாக்கா மூஞ்சி இருக்கானே அவன

**பெண்** : எங்க அப்பாவ பத்தி பேசுன செருப்பால அடிப்பேன்

**ஆண்** : அப்ப உங்க அம்மாள பத்தி பேசட்டுமா

**பெண்** : ரெண்டு செருப்பு பிஞ்சுக்கும் ரொம்ப பண்ற என்ன பின்னாடி வாரதன்னு சொல்றன்ல எதுக்கு வர்ற

**ஆண்** : அப்படியா… ஏரியால நான்தான்டி உனக்கு security

**பெண்** : ஆ நீ இல்லடா எங்க அப்பாதாண்டா எனக்கு security

**ஆண்** : உன் அப்பன செருப்பாலயே அடிப்பேன்

**ஆண்** : ஏரியால ஒருத்தனுக்கு கூட உன்ன பிடிக்காது ஏனா உன் மூஞ்சி அவனுங்களுக்கு பிடிக்காது

**பெண்** : ஆ உன்த விட என்து நல்லாதான் இருக்கு

**ஆண்** : உன் மேல ஏரியால எவனாவது கைய வச்சு இருக்கானா

**ஆண்** : இல்ல கை வைக்கதான் விட்டுருக்கனா

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது அந்த bike-ல் வந்தவர்கள் திரும்பி வந்து அந்த பெண்ணின் கழுத்தில் இருக்கும் செயினை அறுக்கிறார்கள்

அந்த bike அங்கிருந்து விரைந்து செல்கிறது

**பெண்** : இல்ல அதுக்கு ஏய்

**பெண்** : என் செயின் செயின்

**பெண்** : எங்க அப்பா திட்டுவாருடா

**ஆண்** : இந்தா எப்படி எகிர்றேன் பார்

அந்த பெண்ணிடம் பேசிக்கொண்டிருந்தவன் அவர்களை துரத்துகிறான்

**பெண்** : சீக்கிரமா போடா சீக்கிரமா போடா ஓடு

**ஆண்** : பிடிச்சுறேன் அய்யய்யோ

அவன் அவர்களை பார்த்து

**ஆண்** : டேய் ஏண்டா இப்படி ஓடிற நில்லுங்கடா

**ஆண்** : என்கிட்ட மோதிட்டு அப்பறம் இந்த subway-வே விட்டு வெளிய போங்கடா

bike நிற்கிறது

**ஆண்** : நிறுத்திட்டானுங்க

Bike-ன் பின்னால் இருப்பவன் இறங்குகிறான்

**ஆண்** : காலிடா நீ.. வர்றேன்

**ஆண்** : ஏய் எந்த ஏரியா பசங்க நீங்க என்ன snatching-கா நாங்கெல்லாம் watching-டா

Bike-ன் பின்னால் இருந்தவன் தலையில் ஒரு தொப்பி அணிந்திருக்கிறான், முகத்தை kerchief-ஆல் மறைத்திருக்கிறான்

அந்த பெண்ணை பின் தொடர்ந்தவன் அவர்களிடம்

**ஆண்** : அய்ய bloody fool

**ஆண்** : என் டாவோட செயின கொடுடா

செயின் அறுத்தவன் ஒரு கத்தியை நீட்ட

அந்த பெண்ணை பின் தொடர்ந்தவன் அவர்களிடம்

**ஆண்** : ஓகே take it.. Its my gift all the best

மேரி செயின் குய்யா

**ஆண்** : carry on bro ok

**ஆண்** : கூல்

என்று கூறிவிட்டு திரும்பிகிறான்

செயின் பறிப்பவர்கள் அங்கிருந்து bike-ல் கிளம்புகிறார்கள்

அந்த பெண் அங்கு வருகிறாள்.

அந்த பெண்ணை பின் தொடர்ந்தவன் அவளிடம்

**பெண்** : என்னாச்சு என்னாச்சு என் செயின் எங்க என் செயின என்ன பண்ண

**ஆண்** : கூல் 200 சி.சி பக்கா pick up பிச்சுக்கினு போயிட்டான்

**பெண்** : செயின் எங்க

**ஆண்** : flying-லயே போய் முதுகுல ஒன்னு வச்சேன்

**பெண்** : அய்யோ நான் செயின் கேட்டேன் செயின் எங்க

**ஆண்** : ஏய் பித்தாள செயின்தானே எதுக்குடி கத்துற உன் அப்பா கொய்யா மூஞ்சி என்ன Gold-டா போட்டான் வாடி போலாம்

என்று கூறிக்கொண்டே அப்பெண்ணின் தோள் மீது கையை போட்டு தள்ளிக்கொண்டு செல்கிறான்

**பெண்** : ஏய் கைய எடுறா தடியா

**[CUT]**

**SCENE NO : 20** **GUNA PLACE / INT / DAY**

மதியும் அவனது நண்பர்களும் ஒரு
table-லை சுற்றி நின்றுகொண்டிருக்க

குணாவிடம் ஒரு ஏஜென்ட்

**ஏஜெண்ட்** : சென்னயில் இருக்குற
மாதிரி மும்பையில
chain snatchers
இல்ல பக்குவம் இல்லாம
பண்ணி மாட்டிக்குறானுங்க
நம்ம பாந்திரா யூசப்ல
அவர்தான் deal பண்றாரு
ஒகேனா ஒரு வார்த்தை
சொல்லு

மதி அவர்கள் பேசுவதை கவனிக்கிறான்

குணா ஏஜென்டிடம்

**ஏஜெண்ட்** : ஐம்பது ரூபா advance
தர்றேன்

**ஏஜெண்ட்** : என்ன சொல்ற

**ஏஜெண்ட்** : transfer order
மாதிரிதான்

**ஏஜெண்ட்** : best திருட்டு பசங்க
ஒவ்வொரு மாசம்
ஒவ்வொரு state

**குணா** : ஏதோ பேசனுன்னு
சொன்னியே

**ஏஜெண்ட்** : விளையாடாத குணா

**குணா** : நீ என்ன என் friend-ஆ
இல்ல figure-ஆ
விளையாடுறதுக்கு

**ஏஜெண்ட்** : நல்ல deal குணா

**குணா** : silent-ஆ plan பண்ணி
correct-ஆ போயிட்டு
இருக்கு. திருடனுக்கு மட்டும்
பேராசை வரவே கூடாது.
கம்மியா லாபம் இருந்தாலும்
safe and easy crime

**குணா** : கிளம்பு

**குணா** : local-ல எதாவது வேலை
இருந்தா சொல்லு

ஏஜென்ட் குணாவை பார்த்து நக்கலாக

**ஏஜெண்ட்** : என்ன குணா என்ன கீறலு
ரெண்டு பேரும் புஸ்
ஆயிட்டீங்க. என்ன பயம்
வந்துருச்சா, கெத்தா இருந்த
இப்ப சப்பையா ஆயிட்டியே

**ஏஜெண்ட்** : என்ன குணா பாம்பேல்ல இருந்து வரும் போது operation ஏதாவது பண்ணிட்டு வந்துட்டியா

கீரல் மணி புகைபிடிக்கும் காட்சி

குணா ஏஜென்ட்-டிடம் ஒரு injection-னை காட்டி

**குணா** : கொலம்பியா நாட்டுல ஒரு தவளை இருக்கு. இது அதோட உடம்புல இருந்து எடுத்தது. போதைக்கு 5ml தான் . பத்து ml ஏத்துனேன் ஒரு வாரம் தூங்கிட்டே இருப்ப. இருபது ml ஏத்துனேன் பேய் மாதிரி சுத்திக்கிட்டே இருப்ப. இதையே மொத்தமா ஏத்துனேன் உன் உயிர நீயே தேடிக்கிட்டு இருப்ப

**குணா** : இப்ப கிளம்புறியா இல்ல உன் உயிர நீயே தேடுறியா. கெத்த பத்தி என்கிட்டயே பேசுறியா

**குணா** : என்னைக்கும் வேண்டுன்னு சொல்றது கெத்து கிடையாது வேண்டான்னு அழுத்தி சொல்றவன்தான் கெத்து

**குணா** : இப்ப சொல்றேன் எனக்கு உன்னோட deal வேண்டாம்

ஏஜென்ட் அங்கிருந்து செல்கிறான்

குணா ஊசியை போட்டுக்கொள்கிறான்

குணா போதையடைகிறான்

மதி குணாவை வித்தியாசமாக
பார்க்கிறான்

**[CUT]**

**SCENE NO : 21** **SNATCHERS PLACE / EXT / DAY**

மதியும் அவனது நண்பர்களும்
அவர்களின் இடத்தில்
பேசிக்கொண்டிருக்கிறார்கள்

மதியின் நண்பர்கள் அனைவரும்
அமர்ந்திருக்க மதி மட்டும் அங்குமிங்கும்
நடந்துகொண்டிருக்கிறான்

கணேஷ் அவனின் காதலியிடம் போனில்

**கணேஷ்** : என்னது iphone 6.s வேணுமா போன மாசம் தானடீ tab வாங்கி கொடுத்தேன்

**கணேஷ்** : சரி நொய் நொய்னாத try பண்றேன் ஆனா ஒன்னு மட்டும் சொல்றேன் first என்ன phone வச்சு இருந்தேன்னு மட்டும் நியாபகம் வச்சுக்கோ

**கணேஷ்** : சரி

கணேஷ் போனை கட் செய்கிறான்

**நண்பன்** : என்னடா சொல்றா உன் ஆளு

**கணேஷ்** : பொண்ணுங்க ஆசைப்படுக்கிட்டே இருக்காங்க மச்சான். லவ் ரொம்ப காஸ்ட்லி ஆயிருச்சுடா, செயின் அடிச்சு கொடுத்தா கூட இதுங்களுக்கு பத்த மாட்டேங்கது. கையில இருந்தது எல்லாம் காலி round போலான்னு பாத்தா குணாவ கேக்காமா போக முடியாது

**கணேஷ்** : ஆமா இந்த மாசம் எவ்வளவுதான் அடிச்சோம்

**நண்பன்** : 42 செயின் அடிச்சோம் மொத்தம் 130 சவரன்

**மதி** : எவ்வளவு அடிச்சாலும் waste

மதியை கணேஷ் அதிர்ச்சியுடன் பார்க்கிறான்

**கணேஷ்** : ஏண்டா

**மதி** : பின்ன என்னடா அடிக்குறது எல்லாத்தையும் எடுத்துட்டு போய் குணாகிட்ட கொடுத்தா

**கணேஷ்** : அவன்தானே plan போட்டு தர்றான்

**மதி** : ஆனா அடிக்குறது நம்மதானே ஏன் நம்மளால தனியா செய்ய முடியாதா

**மதி** : எவ்வளவு கஷ்டப்பட்டு அடிச்சோம். 130 சவரன் வவ்வால் ஒரு சவரனுக்கு 20000 தர்றானு நீதானே சொன்ன

**மதி** : அப்பம் 130 சவரனுக்கு எவ்வளவு ஆச்சு

**கணேஷ்** : திடீர்ன்னு கேட்ட எப்படிறா

**மதி** : 2600000 ரூபா

**மதி** : நம்மளுக்கு எவ்வளவு வந்துச்சு

**நண்பன்** : வெறும் பத்து லட்சம்தான்

**மதி** : 1600000 குணா எடுத்துக்கிட்டான் ஒரு மாசத்துக்கு 25 lakhs கூட இல்லன்னா இந்த சிட்டியில எப்படிடா மச்சான் வாழ்றது

**நண்பன்** : டேய் என்னடா சொல்ல வர்ற

**மதி** : நம்ம எவ்வளவு கஷ்டப்பட்டு அடிக்குறோம் அது நமக்கு மட்டும்தான் use ஆகனும் எனக்கு என்னமோ குணா இல்லாம நம்மளே பண்ணலான்னு தோணுது

கணேஷ் கோபமாக மதியிடம்

**கணேஷ்** : டேய் என்னடா குணா வேணான்னு சொல்றியா. குணா இல்லாம ஒன்னும் புடுங்க முடியாது அவன் sketch எல்லாம் எவ்வளவு sharp-ஆ இருக்கும் தெரியும்ல. என்ன புதுசா வந்துட்டு ஓவரா பேசிட்டுருக்க

**மதி** : கணேஷ்

**மதி** : பணம் இருக்குறவன்கிட்டதான் இந்த உலகம் அடிமையா இருக்கும் நம்ம அடிமையா இருக்க போறோமா இல்ல அடிமை ஆக்க போறொமா

**மதி** : நீங்களே decide பண்ணுங்க

Top angle shot zoom back ஆகிறது

**[CUT]**

**SCENE NO : 22** **MOUNT ROAD / EXT / NIGHT**

போலீசார் சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்

போலீசார் bike-ல் வரும் இரண்டு பேரை பிடித்து ஊத சொல்கின்றார்

**போலீஸ்** : நிறுத்து நிறுத்து நிறுத்து நிறுத்து உள்ள வா உள்ள வா

**போலீஸ்** : ஊது

**குரல்** : சார் எல்லாம் correct-டாதான் சார் இருக்கு

**போலீஸ்** : நல்லா ஊது

**குரல்** : சார் பாருங்க சார்

**போலீஸ்** : நல்லா ஊதுடா

அவன் குடித்திருப்பதை கண்டுபிடித்து inspector-ரிடம் கூறுகிறார்

**போலீஸ்** : சார் drunk and drive சார்

**போலீஸ்** : வண்டிய off பண்ணு
வண்டிய off பண்ணு

**குரல்** : சார் time ஆச்சு சார்
விடுங்கா சார்

**INTERCUT**

மதி ரோஹித்துடன் bike-ல் இருந்தபடியே கணேஷிடம் போனில் பேசுகிறான்

**மதி** : கணேஷ்

**கணேஷ்** : சொல்லு மச்சான்

**மதி** : குணா இல்லாம ஒன்னும்
பண்ண முடியாதுன்னு
சொன்ன நானும்
ரோஹித்தும் இப்பதான்
அடிச்சோம்

**கணேஷ்** : டேய் என்னடா சொல்ற

**மதி** : எப்படியும் ஒரு 200000
தேறும்டா big aunty big
chain

**கணேஷ்** : மச்சான் குணாக்கு தெரிஞ்சா
அவ்வளவுதாண்டா

**மதி** : ஏய் இந்த matter
குணாக்கு எப்படி தெரியும்

**கணேஷ்** : மச்சான் நீ தேவையில்லாத
வேலை பாத்துட்டு இருக்க

**மதி** : இந்தா பாரு மச்சான் இதே மாதிரி பண்ணோம்னா monthly 1500000 save பண்ணலாம் நம்மளும் எத்தன நாள்டா bike-குலயே போய்கிட்டு இருக்குறது car-லாம் வாங்க வேண்டாமா

**கணேஷ்** : சரி முதல்ல அந்த spot-ல இருந்து வெளிய வாங்க

**மதி** : ஆ ஓகே ஓகே வந்துறேன் ஆ ஓகேடா

**கணேஷ்** : ஆ

மதி போன்னை கட் செய்கிறான்

**மதி** : என்ன மச்சான் நான் சொன்னது correct தானே

**நண்பன்2** : ம்

**மதி** : ஆ

ரோஹத் ஹெல்மெட் அணிகிறான்

**குரல்** : சார் இல்ல சார்

**போலீஸ்** : ஏய் எடுயா வாய ஊது

**போலீஸ்** : என்னய்யா இது

போலிசார் bike-ல் வந்தவர்களின் proof-பை check பண்ணிக்கொண்டிருக்க மதியும், ரோஹித்தும் அங்கு வருகின்றனர்

போலீசார் அவர்களை நிறுத்துகின்றனர்

**போலீஸ்2**: நிப்பாட்டு நிப்பாட்டு நிப்பாட்டு

**போலீஸ்2**: ஓரமா வா ஓரமா வா ஓரமா வா

**குரல்** : license எடு

**குரல்** : insurance எடு

போலீசார் ஹெல்மெட்டை கழட்ட சொல்கின்றனர்

**குரல்** : ஹெல்மெட்ட கழட்டு

**குரல்** : சார் எல்லாம் இருக்கு சார்

**குரல்** : எல்லாம் இருக்கு சார்

**குரல்** : வண்டிய வண்டிய off பண்ணு வண்டிய off பண்ணு

Walkie-talkie-யில் செயின் பறிப்பு

சம்பவம் பற்றி செய்தி வர inspector
மதியையும் ரோஹித்தையும் பார்க்கிறார்

**குரல்** : சார் crime report சார் chain snatch புதுப்பேட்டை அம்பத்தூர்ல இருந்து

**குரல்** : கழட்டுடா ஹெல்மெட்

**குரல்** : ரெண்டு பசங்க duke bike-ல

**குரல்** : ரெண்டு பேருமே ஹெல்மெட் போட்டு இருந்தாங்க

**போலீஸ்** : கழட்டுடா கழட்டு கழட்டுடா

**குரல்** : green t-shirt brown shirt

**போலீஸ்** : என்னடா முறைச்சுட்டு இருக்க

**குரல்** : வண்டி number plate கிடையாது

மதியும், ரோஹித்தும் போலீசாரை
தள்ளிவிட்டு அங்கிருந்து bike-ல்
சீறிப்பாய்கின்றனர்

**போலீஸ்** : சார்

**குரல்** : சார் கிளம்பி போ

**போலீஸ்** : டே டே டே டேய்

Inspector அவர்களை பின்தொடர்கிறார்

**போலீஸ்2**: டேய் டேய் டேய் டேய்

**இன்ஸ்** : வண்டியில number plate இல்லையா

**இன்ஸ்** : அப்படியா

**இன்ஸ்** : சீக்கிரம் புடி புடி புடி வாங்க வாங்க வாங்க

**குரல்** : ஏய் வாடா இங்க என்ன தண்ணியா full tank-ல இருக்க போல

Drunk & drive-ல் பிடிபட்டவன் போலீசாரிடம் நக்கலடிக்கிறான்

BGM starts

Chasing

Walkie-talike-யில் மதியை பற்றி செய்தி தெரிவிக்கப்படுகிறது

**குரல்** : chain snatchers escape ஆகி இருக்காங்க

**குரல்** : முருகானந்தம் எஸ்.ஐ அவுங்கள chase பண்ணிட்டு போய் இருக்கார் சார் வட சென்னையில் யார் இருக்கா

**குரல்** : patrol எஸ்.ஐ கொஞ்சம் line-ல வாங்க

A.C.P jeep செல்லும் சாலையின் எதிர்சாலையில் மதி செல்ல

**போலீஸ்** : சார் சார் அந்த accused opposite-ல போறாங்க பாருங்க turn பண்ணுங்க

**போலீஸ்** : turn பண்ணுங்க

**போலீஸ்** : வண்டிய திருப்புங்க

A.C.P அவர்களை பின் தொடர்கிறார்

**சக்தி** : கோ கோ A.C.P சக்திவேல் here

**சக்தி** : accused-ட chase பண்ணிதான் போயிட்டு இருக்கோம்

Bike-ல் அவர்களை துரத்தும் Inspector அவர்களின் bike அருகே செல்ல மதி Inspector bike-கை மிதிக்கிறான்

Inspector-ன் bike கீழே விழுந்து சறுக்குகிறது

**போலீஸ்** : சார் போங்க சார்

**போலீஸ்** : போங்க போங்க

A.C.P அவர்களை பின் தொடர்கிறார்

**சக்தி** : T.நகர் patrol யார் இருக்கான்னு

**சக்தி** : பாருங்க line-ல வரச்சொல்லுங்க

ஒரு குறுகிய பாதையில் bike செல்ல

அவர்களை பின் தொடரும் A.C.P-யின் ஜீப் ஒரு சிறிய சுவரில் ஏறி கவிழ்கிறது

மதியும், ரோஹித்தும் bike-கை நிறுத்துகிறார்கள்.

ஜீப்பின் கதவை திறந்து A.C.P முதலில் வெளியே வருகிறார்

A.C.P-யின் காலில் அடிபட்டு அவர் கீழே சரிகிறார்

மதி A.C.P-யை பார்க்கிறான்

Inspector ஜீப்பின் உள் இருந்து வெளியே குதிக்கிறார்

மதி சென்ற bike அவர்கள் முன் வந்து நிற்கிறது

Inspector நொண்டிக்கொண்டே அவர்களை நோக்கி வர

**குரல்** : ஏய் ஏய் ஏய் டேய் ஏய்

BGM starts

மதி bike-கிலிருந்து இறங்கி வந்து

Inspector-ரை போல நொண்டிக்கொண்டே

வந்து Inspector-ன் காலில் மிதித்து அவரை கீழே விழச்செய்கிறான்

மதி A.C.P-ன் அருகில் வந்து அவர் கழுத்தில் இருக்கும் செயினை பறித்து கைகளில் சுற்றிக்கொண்டே நடக்க

அவன் பின் intermission title open ஆகிறது

மதி bikeகில் ஏறுகிறான்

bike அங்கிருந்து கிளம்புகிறது

**[CUT]**

# INTERMISSION

**SCENE NO : 23** **GUNA PLACE / INT / DAY**

குணா bike-கை ஒரு துணியால் துடைத்துக்கொண்டிருக்கிறான்.

மதியும் அவனது நண்பர்களும் அங்கு வருகின்றனர்

குணா மதியிடம்

**குணா** : என்னடா நேத்து நைட்டு ஒரே chasing போல

மதி வாயில் chewing gum-மை மென்று கொண்டே

**மதி** : ஆமாண்ணே போலீஸ்ஸ கலாய்ச்சுட்டோம்

**குணா** : ஆ

மதி குணாவிடம் தான் A.C.P-யிடம் இருந்து அறுத்த செயினை காண்பித்து

**மதி** : அண்ணா அந்த A.C.P-யோட செயின்ணா...எப்படியும் ஒரு பத்து தேறும்

குணா அந்த செயினை கையில் வாங்கிகொண்டு

**குணா** : சூப்பர்டா....சூப்பர்டா உங்களுக்கெல்லாம் மனசுல பெரிய ஹீரோன்னு நினைப்பா செயின் அடிச்ச பத்து நிமிஷத்துல சிட்டிக்குள்ள எங்கயும் சுத்தக்கூடாதுன்னு தெரியாது.

மதியின் வயிற்றிலும், ரோஹித்தின் முகத்திலும் குத்துகிறான்

**குணா** : நீங்களாம் என்னடானா A.C.P-யோட செயின அடிச்சிறுக்கீங்க

குணா மதியையும் அவனது நண்பர்களையும் பார்த்து

**குணா** : போலீஸ்காரன யாருமே சீண்டவே கூடாது

மறுபடியும் குணா மதியின் வயிற்றில் குத்துகிறான்

மதி வயிற்றை கையால் பிடித்துக்கொண்டு வலியில் துடிக்கிறான்

குணா அவர்களிடம் பேசிக்கொண்டு மதியின் வயிற்றில் குத்துகிறான்

**குணா** : யாரு யாருன்னு நெருப்பு மாதிரி தேடிக்கிட்டே இருப்பாங்க

**குணா** : இனி என்ன தாண்டி யாராவது கைய வச்சீங்க

குணா திரும்பி உள்ளே செல்ல முயல மதி குணாவிடம்

**மதி** : ஆமா அடிக்குறதுல பாதிய நீயே எடுத்துக்குற நாய்க்கு எலும்பு துண்டு போடுற மாதிரி போட்டா எங்களுக்கு எப்படி பத்தும்

**கணேஷ்** : டேய்

குணா மதியின் சட்டை காலரைப்பிடித்து

**குணா** : நீங்களாம் நாய்ங்கதான்டா நான் இல்லன்னா நீங்க எல்லாம் சொறி வந்து ரோட்டுல அடிபட்டு கிடப்பீங்க

கணேஷ் குணாவிடம்

**கணேஷ்** : இனி இப்படியெல்லாம் பண்ணமாட்டான்.. மன்னிச்சுருணே...பாவம்

**குணா** : இதுவரைக்கும் நீங்க மாட்டாம இருக்க காரணமே நான் தான் என்னோட plan தான்

**குணா** : தனியா போய் பண்றேன்னு பண்ணீங்க என்ன ஆச்சு அந்த குழந்த அடுத்த நாளே ஹாஸ்பிட்டல்ல அவுட்டு

**குணா** : எவ்வளவு pressure தெரியுமா....

**குணா** : டேய் சொல்லி வை discipline ரொம்ப முக்கியம்

**குணா** : இதுக்கு அப்புறம் தனியா போய் பண்றேன்னு எவனாவது இறங்குனீங்க நசுக்கிருவேன்

மதி வயிற்றை பிடித்துக்கொண்டு
கணேஷையும், ரோஹித்தும் பார்க்கிறாள்

**[CUT]**

**SCENE NO : 24 APARTMENTAL AREA / EXT / NIGHT**

ஒரு பெண் காரின் கதவருகே
நின்றுகொண்டு காரில் உள்ள தன்
தோழியிடம் பேசிக்கொண்டிருக்கிறாள்

மதி bike-ல் அந்த பெண்ணை
பார்த்தபடியே கடந்து செல்கிறான்

குணா கூறிய வார்த்தைகள் அவன்
காதில் ஒலிக்கிறது

தலையில் தொப்பி அணிகிறான்
முகத்தை மூகமூடியால் மறைக்கிறான்

Bike-ல் அந்த பெண்ணை நோக்கி
வேகமாக வருகிறான்

அந்த பெண்ணை நோக்கி வேகமாக
வருகிறான்

அந்த பெண் இவனை கவனிக்காமல் தன்
தோழியுடன் பேசிக்கொண்டிருக்கிறாள்

மதி அவனின் அருகே வர அப்பெண்ணின்
ஜடை அவிழ்கிறது

மதி அவள் கழுத்தில் இருக்கும்
செயினை பிடித்து இழுக்க செயின்
முடியில் சிக்கிக்கொள்கிறது

மதி வேகமாக செயினை பிடித்து இழுக்க
அந்த செயின் அவள் கழுத்தில் காயத்தை
ஏற்படுத்திவிட்டு அறுந்துபோகிறது

**[CUT]**

**SCENE NO : 25** **HOME / INT / NIGHT**

வீட்டில் டி.வி-யில் news ஓடிக்கொண்டிருக்கிறது

அறிவு அருகில் அமர்ந்திருக்க அம்மா ரம்யாவிற்க்கு எதையோ கற்றுக்கொடுக்கிறாள்

அம்மா : மறுபடியும் இப்படி சுத்துனாதான் not correct -ஆ வரும்

அப்பா kitchen-னில் ரம்யா போன பின் சரக்கு அடிப்பதற்க்காக காத்திருக்கிறார்

மதி வீட்டிற்க்குள் வருகிறான்

அம்மா மதியிடம் ரம்யாவை காண்பித்து

**அம்மா** : வாடா இது ரம்யா…அறிவோட office-ல வேலை செய்யுறா

**ரம்யா** : ஹாய்

**மதி** : ஹாய்

மதி அவன் ரூம்மை நோக்கி செல்கிறான்

அம்மா ரம்யாவிடம்

**அம்மா** : கொஞ்ச கூச்ச சுபாவம் பொண்ணுங்ககிட்ட பழகுனது இல்லையா

**அம்மா** : அதான்

அறிவு அப்பாவை பார்க்க, அப்பா கை நடுங்குவதை அறிவிடம் காண்பிக்கிறார்

அறிவு அப்பாவை அலட்சியமாக பார்க்க, அப்பா தலையில் அடித்துக்கொள்கிறார்

டி.வி.யில் மதி செயின் அறுத்த சம்பவம் news-ஸில் காட்டப்படுகிறது

**T.V-NEWS**: சென்னை புறநகர் பகுதியான செம்மஞ்சேரியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் அருகே தன் தோழியுடன் பேசிக்கொண்டிருந்த போது ப்ரியா என்ற பெண்ணின் கழுத்தில் இருந்து தங்க செயினை முகமூடி அணிந்து bike-ல் வந்த மர்ம நபர் பறித்து சென்றார்…

அறிவு டி.வி.யின் சத்தத்தை கூட்டுகிறான்

டி.வி.யில் செயின் அறுத்த news காட்டப்படுகிறது

**T.V-NEWS**: இதில் அதிர்ஷ்டவசமாக கழுத்தில் சில காயங்களுடன் ப்ரியா உயிர் தப்பினார்

மதி தோலில் துண்டுடன் டி.வி.யில் ஓடும் news-ஸை பார்த்தபடியே அவர்களை கடந்து பாத்ரூம்முக்கு செல்கிறான்

**T.V-NEWS**: இவர் இரண்டு நாட்களுக்கு முன்பு தனது முகநூலில் திருட்டு போன செயினின் புகைபடத்தை போட்டுள்ளார் அந்த செயினில் பட்டாம்பூச்சி வடிவிலான ஐந்து லட்சம் மதிப்புள்ள வைரம் பதிக்கப்பட்டு இருந்தது தெரியவந்துள்ளது.

**T.V-NEWS**: காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரனை நடத்தி வருகின்றனர் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பெண்கள் மத்தியில் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது

அம்மா அந்த செய்தியை அதிர்ச்சியுடன் பார்த்தபடியே ரம்யாவிடம்

**அம்மா** : இப்பலாம் பொண்ணுங்க ரோட்டுல நடமாடவே முடியல்லம்மா இதெல்லாம் பாத்தா பயமாத்தான் இருக்கு

**அம்மா** : நீ கூட ரொம்ப ஜாக்கிரதையா இருக்கனும்மா

ரம்யா அங்கிருந்து கிளம்ப தயாரகிறாள்

**ரம்யா** : aunty time already 8:30 ஆயிடுச்சு நான் கிளம்புறேன்

அம்மா அவளை தடுத்து

**அம்மா** : ஏய் இரும்மா எப்படி போவ

**ரம்யா** : நான் bus-ல போயிடுவேன் aunty

**அம்மா** : என்னம்மா இப்பதானா news பாத்த… இரும்மா டேய் அறிவு நீ drop பண்ணிட்டு வாடா

**ரம்யா** : thanks aunty நான் போயிட்டு வர்றேன்

**அம்மா** : ஜாக்கிரத

அறிவு எழுந்து bike சாவியை
எடுத்துக்கொண்டு அம்மாவை பார்த்து

**அறிவு** : yes...

அம்மா அறிவை பார்த்து

**அம்மா** : yes...

அப்பா சரக்கு பாட்டிலை பார்த்து

**அப்பா** : yes...

**[CUT]**

**SCENE NO : 26** **GUNA PLACE / INT / DAY**

குணா முன் மதியும் அவனது
நண்பர்களும் வரிசையாக நிற்கின்றனர்

குணா போனில்

**குணா** : அந்த பொண்ணு
மேட்டருக்கும் நம்ம
பசங்களுக்கும் சம்பந்தமே
இல்ல சார்

**குணா** : சார் எவனாவது கத்துகுட்டி
பண்ணிருப்பான் சார்

**குணா** : அய்யய்ய சார் நான் தான்
தொழில் பண்றதில்லன்னு
அன்னைக்கே சத்தியம்
பண்ணிட்டனே ஆ சரிங்க
சார்

குணா போனை கட் செய்துவிட்டு
கணேஷை பார்த்து

**குணா** : டேய் அந்த பொண்ணு
மேட்டரு நீங்க ஏதும்

**கணேஷ்** : அண்ணே என்னண்ணே நான்
எப்படிணே உனக்கு
தெரியாம

குணா இன்னொருவனை பார்த்து

**குணா** : நேத்து நீ எங்கடா இருந்த

**நண்பன்** : நேத்து figure கூட கொஞ்சம் வெளிய போய் இருந்தண்ணே

குணா மதியை பார்த்து

**குணா** : நேத்து நீ எங்கடா இருந்த

மதி அமைதியாக குணாவை பார்க்க

குணா அவனை அதட்டிகேட்க

**குணா** : நேத்து நீ எங்க இருந்த

இன்னொருவன் குணாவிடம்

**நண்பன்** : அண்ணே என் கூடதாண்ணே இருந்தான்

**நண்பன்** : நாங்கெல்லாம் ஒன்னாதான் room-ல video game விளையாடிக்கிட்டு இருந்தோம்

மதியுன் நண்பர்கள் அனைவரும் மதியை பார்க்க, மதி அவர்களை பார்க்கிறான்

**[CUT]**

**SCENE NO : 27** **HOME / INT / DAY**

வீட்டில் அம்மா துடைப்பம் வைத்து தூசி துடைத்துகொண்டிருக்க

அப்பா கையில் வாட்ச் கட்டியபடியே அம்மாவிடம்

**அப்பா** : அம்மா….

**அம்மா** : ம்….

**அப்பா** : இ ந்த சுகுமாரு retired ஆனதுக்கு அப்பறம் போய் பாக்கவே இல்ல

**அம்மா** : ம்

**அப்பா** : அவன போய் பாத்துட்டு வரும் போது அறிவு கூட வந்துறேன்

**அம்மா** : சரி என்னங்க வரும் போது சுகுமார் அண்ணன

இழுத்துட்டு வாங்க family-யோட வந்து ரொம்ப நாள் ஆச்சு

**அப்பா** : சரி

**அம்மா** : ம்

**அப்பா** : ஆமா என்ன
பண்ணிட்டுருக்க

**அம்மா** : clean பண்ணிட்டு
இருக்கேங்க

**அப்பா** : இதோ அங்க இருக்கு பாரு
ஒட்டர இ ந்தா இ ந்த பக்கம்
பாரு அட கீழ பாரும்மா
ஆஹ நீ சரிபட்டு வரமாட்ட
ஒரு சின்ன வயசு
வேலைக்காரியா பாத்து
வச்சுக்க வேண்டியதுதான்

**அம்மா** : ஏய் retired கம்முனு
போய்யா இ ந்தா பாருங்க
வரும் போஒது ரெண்டு
பேரும் ஊர் சுத்தாம சீக்கிரம்
வீட்டுக்கு வாங்க

அப்பா வெளியில் கிளம்புகிறார்

**[CUT]**

**SCENE NO : 28** **ROAD SIDE / EXT / NIGHT**

மதியும் அவனது நண்பர்களும் ஒரு
ஆளில்லா இடத்தில்
பேசிக்கொண்டிருக்கின்றனர்

கணேஷ் மதியிடம்
பேசிக்கொண்டிருக்கையில்

**கணேஷ்** : இப்ப என்னடா பண்ணலாம்
ஆ ஏதோ செயின் அடிச்சமா
குடிச்சமானு சுத்திகிட்டு
இருந்தோம் இப்ப தேவை
இல்லாத பிரச்சனை
பண்ணிட்டு வந்து நிக்குற

**மதி** : என்ன feel பண்றியா

**கணேஷ்**: யாரு நான்னா நான்லாம்
bike-ல solo-வா ஓட்டி
ரெண்டு கையில ரெண்டு
செயின் அடிச்சவன் டா நான்
feel பண்றனா evidence
எதுவும் இருக்ககூடாது
அதான் நான் பயப்படுறேன்

**மதி** : evidence-லாம் ஒன்னும்
இல்ல

**கணேஷ்** : நான் சொல்றத கேளு குணா கையில சொல்லிரலாம் அது எல்லாத்தையும் பாத்துக்கும் பிரச்சனை அமைதியா முடிஞ்சுடும்

**மதி** : என்னடா எப்ப பாத்தாலும் குணா குணாங்குற அவன் என்ன பண்ணிட்டான் உனக்கு அவன் ட்ட சொன்னா பாதிதான் கிடைக்கும் நான் என்ன தெரிஞ்சாடா பண்ணுனேன் பத்துல ஒன்னு அப்படிதான் மிஸ் ஆகும் மச்சி news பாத்தல்ல நான் செயின மட்டும் அடிக்கல butterfly shape-ல diamond-ம் அடிச்சு இருக்கேன் அத வித்தா அஞ்சு ரூபா கிடைக்கும் ஒன்னு பண்ணு வவ்வால்கிட்ட பேசு deal-ல நம்மளே முடிச்சுடலாம்

**கணேஷ்** : டேய் அந்த மாதிரியெல்லாம் என்னால பண்ண முடியாது ஒழுங்கா குணாகிட்ட சொல்லு

இன்னொரு நண்பன் கணேஷை
அழைத்து வாயில் சிகரெட் வத்து
lighter-ல் பற்றவைத்து

**நண்பன்** : டேய் கணேஷ்

**நண்பன்** : வவ்வால்கிட்ட தனியா deal
பேசு இனிமே குணா
game--லயே இல்ல

**INTERCUT**

**SCENE NO : 28A** **HOME / INT / NIGHT**

அம்மா மதியின் ரூம்முக்குள் clean செய்ய வருகிறாள்

அங்கும் இங்கும் கிடக்கும் துணிகளை மடித்துவைக்கிறாள்

**அம்மா** : அய்யோ பாரு எப்படி வச்சுருக்கான்

ஏதோ vibration சத்தம் கேட்கிறது

பீரோவினுல் இருந்து வருவதை காதை பீரோவில் வைத்து பார்த்து அறிகிறாள்

பீரோவை திறக்க முயல்கிறாள் பீரோ பூட்டியிருக்கிறது சாவி எடுக்க செல்கிறாள்

**அம்மா** : பூட்டிட்டு போயிட்டானா இன்னொரு சாவி எங்க வச்சனோ

**INTERCUT**

**SCENE NO : 28B** **ROAD SIDE / INT / NIGHT**

மதிக்கு அவனது காதலியிடம் இருந்து போன் வருகிறது

மதி attend செய்கிறான்

**மதி** : ஏய் என்னடி

**மதி GF** : ஏண்டா அந்த நம்பருக்கு பண்ணா எடுக்கமாட்டேங்கற

மதி கோபமாக

**மதி** : ஏய் எத்தன தடவை சொல்லிருக்கேன் அந்த நம்பருக்கு call பண்ணாத இந்த நம்பருக்கு call பண்ணுன்னு

**மதி GF** : என்ன பண்ணிட்டு இருக்க

**மதி** : சரி கொஞ்சம் busy-யா இருக்கேன் இருக்கேன் அப்புறமா பேசுறேன்

**மதி GF** : எங்கடா இருக்க நீ

**மதி** : வைடி நான் பேசுறேன் வை இவ ஒருத்தி நய்யு நய்யு நய்யுன்னு

மதி போனை கட் செய்கிறான்

**INTERCUT**

**SCENE NO : 28C** **HOME / INT / NIGHT**

அம்மா சாவியோடு பீரோவை திறக்க உள்ளிருந்து போன் செயின் அனைத்தும் விழுகிறது

**அம்மா** : யாரு phone இது

அம்மா போனையும் kerchief-ல் சுத்தப்பட்டிருக்கும் செயினை பார்த்து அதிர்ச்சியடைகிறாள்

**INTERCUT**

கணேஷ் மதியிடம்

**கணேஷ்** : மச்சி வவ்வால்கிட்ட பேசிட்டேன் முதல்ல கொழ கொழன்னான் அப்புறம் நம்ம வழிக்கு வந்துட்டான் ஒரே மேட்டர்தான் குணாக்கு விஷயம் தெரியாம பாத்துக்க சொன்னான்

இன்னொரு நண்பன் மதியிடம்

**நண்பன்** : மதி செயின் எங்க இருக்கு

**மதி** : வீட்டுலதான் மச்சி இருக்கு நீங்க போங்க நான் எடுத்துட்டு வர்றேன்

Bike-ல் headlight on ஆகிறது

Bike-குகள் அங்கிருந்து கிளம்புகிறது

**[CUT]**

**SCENE NO : 29** **HOME / INT / NIGHT**

மதி வீட்டிற்குள் வருகிறான்

மதி பீரோவிற்குள் வைத்திருந்த
பொருள்கள் அனைத்தும் வெளியே
கட்டிலில் வைக்கப்பட்டிருப்பதை பார்த்து
அதிர்ச்சியடைகிறான்

மதி சுற்றிப்பார்க்கிறான்

அம்மா மதியின் கன்னத்திலும்,
நெஞ்சிலும் அடித்துக்கொண்டே

**அம்மா** : டேய் டேய்

**அம்மா** : பாவி

**அம்மா** : என்னடா பண்ணிட்டு வந்துருக்க

**மதி** : அம்மா அம்மா

**அம்மா** : என்னடா பண்ணிட்டு வந்துருக்க என்னடா பண்ணிட்டு வந்துருக்க பாவி

**மதி** : ம்மா…ம்மா…

**அம்மா** : டேய் டேய் என்னடா பண்ணிட்டு வந்துருக்க டேய் டேய்

அம்மா செயினை மதியிடம் காண்பித்து

**அம்மா** : அன்னைக்கு T.V-ல காட்டுனாங்க அதே செயிந்தானே இது

**அம்மா** : சொல்லுடா அதே செயிந்தானே இது

**அம்மா** : ஆ நீயாடா பண்ணது

**அம்மா** : ஆ நீ

**மதி** : ம்மா தெரியாம பண்ணிட்டேன்மா

அம்மா தரையில் உட்காந்து அழுகிறாள் மதி அம்மாவை தொட முயல அம்மா அவன் கைகளை தட்டிவிருகிறாள்

**அம்மா** : அய்யோ அய்யோ

**மதி** : ம்மா ம்மா

**மதி** : ம்மா ம்மா

**அம்மா** : தொடாத என்ன தொடாத போடா போ

**மதி** : ம்மா

அப்பாவிடமும் அண்ணனிடமும் விஷயத்தை கூறுவதற்காக எழுந்து போனை நோக்கி நகர்கிறாள்

**அம்மா** : அண்ணா அப்பாவுக்கு போன் பண்றேன்

**மதி** : புரிஞ்சுக்கோம்மா

மதி அம்மாவை தடுத்து

**அம்மா** : இரு போன் பண்றேன்

**மதி** : ம்மா

**அம்மா** : ஏய் சீ போடா

**மதி** : ம்மா

**அம்மா** : அண்ணா அப்பா

**மதி** : ம்மா என்னம்மா எப்ப பாத்தாலும் அறிவு அப்பான் இருக்க அவுங்க ரெண்டு பேரும் என்னம்மா பண்ணுனாங்க உனக்கு அறிவு எங்கேயோ வேல பாத்து முப்பதாயிரம் ரூபா பணம் தர்றான்.இந்த ஆளு பென்சன் வாங்கி பத்தாயிரம் ரூபா பணம் தர்றாரு. இத வச்சு என்னம்மா பண்ண முடியும் உன்னால உனக்கு எவ்வளவு பணம் வேணும் ரெண்டு லட்சம் வேணுமா மூணு லட்சம் வேணுமா..

நான் தர்றேன்மா உனக்கு
ராணி மாதிரி உன்ன வச்சு
பாத்துக்குறேன்மா
புரிஞ்சுக்க்ம்மா எனக்கு
இதாம்மா புடிச்சு இருக்கு
என்ன மட்டும் ஏம்மா இப்படி
வளத்த

**அம்மா** : டேய் பாவி இப்படி
மாறிட்டயேடா

**மதி** : ம்மா

அம்மா அவனிடமிருந்து விலகி போனின் receiver-ரை எடுக்க மதி receiver-ரை பிடுங்கி கீழே வைத்து அம்மாவின் கைகளை பிடித்து உள்ளே தள்ளுகிறான்

**அம்மா** : டேய் டேய்

**மதி** : ம்மா கேக்க மாட்டியா நீ

**அம்மா** : டேய் விடுறா

**மதி** : ம்மா

**அம்மா** : விடுறா டேய் டேய் விடுறா

Table-ல் இருக்கும் ஒரு தேவதையின் பொம்மை காட்டப்படுகிறது

**[CUT]**

**SCENE NO : 30** **HOME / INT / NIGHT**

அறிவும் அப்பாவும் வீட்டின் கதவை திறக்கிறார்கள்

**அப்பா** : கதவ தாழ்பாள் போடாம எங்க போயிட்டா...ஜெயா

வீட்டின் அனைத்து விளக்குகளும் அனைக்கப்பட்டுருக்கிறது

அப்பா அம்மாவை அழைக்கிறார்

அறிவு light switch-யை ஆன் செய்கிறான்

அறிவு பேக்கை கழற்றி சோ:ஃபாவில் வைத்துவிட்டு வாட்ச்யை கழற்றுகிறான்

**அறிவு** : வர வர அம்மாக்கு வயசாயிடுச்சுப்பா

அப்பா உள்ளிருக்கும் ரூம்மிற்கு சென்று பார்க்கிறார்

அப்பா அதிர்ச்சியில் கத்துகிறார்

**அப்பா** : ஜெயா ஜெயா ஜெயா ஆ ஆ அய்யோ ஜெயா ஜெயா

**அறிவு** : அப்பா

**அப்பா** : ஜெயா ஜெயா ஜெயா

**அப்பா** : ம்மா ஜெயா

**அப்பா** : ஜெயா ஜெயா எந்திரிம்மா
ஜெயா ஜெயா

**அப்பா** : ஜெயா

அப்பாவின் குரலை கேட்டு அறிவு
உள்ளே ஓடுகிறான்

அம்மா தலையில் அடிபட்டு
இரத்தவெள்ளத்தில் தரையில் கிடக்கிறாள்

**அறிவு** : அம்மா

**அப்பா** : ஜெயா…டேய் ambulance-க்கு
phone பண்ணுடா ஜெயா

**அப்பா** : ஜெயா அய்யோ

**அப்பா** : அம்மாவ பாருடா

அறிவு ambulance-க்கு போன்
செய்வதற்காக போனை எடுக்கிறான்

அப்பா அம்மா இறந்துவிட்டதாக
கூறுகிறார்

**அப்பா** : மூச்சு நின்னு போச்சுடா

**அப்பா** : அய்யோ

அறிவின் கையில் இருந்து போன் கீழே
விழுகிறது

Song starts (ஆழி தந்த முத்தே...)

அறிவு அம்மாவின் இரத்ததை
தொட்டுப்பார்த்து கத்துகிறான்

**அப்பா** : ஜெயா ஜெயா

**அறிவு** : அம்மா அய்யோ

மதி சாலையில் bike ஓட்டி செல்கிறான்

அறிவு மதிக்கு call செய்ய
முயற்சசிக்கிறான்

**INTERCUT**

மதி அவனின் நண்பர்களுடன்
அமர்ந்திருக்க

**நண்பன்** : feel பண்ணாத மச்சி நீ
என்ன வேணுனேவா பண்ண

**நண்பன்** : நகைக்காக வேற யாரோ
பண்ண மாதிரிதான்
இருக்கும் கவலப்படாத
நாங்கெல்லாம் உன் கூட
இருக்கோம்

அறிவு வீட்டின் முன் ambulance
நிற்கிறது

அம்மாவின் உடல் postmortem-காக எடுத்து செல்லப்படுகிறது

அறிவும் குமாரும் சொகத்தில் ஜன்னல் ஓரமாக நிற்க ஜன்னலில் மறுபுறம் S.I. போனில்

**S.I** : ஆ வணக்கம்யா நான்

மவுண்ட்ல இருந்து S.I

அமிர்தராஜ் பேசுறேன்யா

ஆமாங்கய்யா lady அடிச்சு

spot-லயே காலி

பண்ணிட்டானுங்க

ஆமாங்கய்யா

**S.I** : நகை மட்டும்தான் ஒரு

பதினஞ்சு பவுன் போய்

இருக்குன்னு சொல்லி

இருக்காங்க....சரிங்கய்யா

சரிங்கய்யா body-ய

postmortem அனுப்பிச்சுட்டு

report பண்றேன்யா

thankyou--யா

Reporter photo எடுக்க வீட்டினுல் செல்கிறான்

குமார் கோபமாக அறிவிடம்

**குமார்** : நம்ம அம்மாவ ஒருத்தன்
உசுரோட கொன்னு போட்டு
போவான் சும்மா விட
சொல்றியா ஆ நீ சொல்றா
போட்டுருவோம்

Song continues

மழை பெய்கிறது அம்மாவின் உடல்
வீட்டின் வெளியே வைக்கப்பட்டிருக்கிறது

மழையில் நனைந்துகொண்டே அறிவு
அம்மாவின் உடல் மீது கைவைக்கிறான்

மதியும் அம்மாவின் உடல் மீது
கைவக்கிறான்

குமாரும் அறிவின் கைமேல்
அவனுடைய கையை வைக்கிறான்

Song ends

**[CUT]**

**SCENE NO : 31** **HOME / INT / DAY**

வீட்டில் அப்பா, அறிவு, குமார், மதி இருக்க S.I. postmortem report-டை அப்பாவிடம் காட்டி கையெழுத்து கேட்க அப்பா S.I.-யிடம்

S.I postmortem report- டை கூறுகிறார்

**S.I** : postmortem report வந்துருச்சு இதுல ஒரு sign பண்ணிட்டிங்கனா

**அப்பா**: postmortem report-ல என்ன சொல்லுது

**S.I** :சார் அது வேண்டாம் சார் please

**அப்பா**: பரவாயில்ல சொல்லுங்க

**S.:I:** நகை பணத்துக்காக இப்படி பண்றவங்கள சும்மா விடக்கூடாது சார் skull break ஆகி blood heavy loss

ஆகிடுச்சு 15 minutes-க்கு

மேல heavy pain-ல

இருந்துதான் செத்து
இருக்காங்க சார்

please

**போலீஸ்** : சார் கொலை நடந்த
இடத்தோட
சம்பந்தப்பட்டவங்க
எல்லாரோட கைரேகையும்
எங்களுக்கு வேணும்

So உங்க கைரேகையும் உங்க

family members

கைரேகையும் வேணும் சார்

போலீசார் அனைவரது கைரேகையையும்
கேட்க

அறிவு கைரேகை கொடுத்துவிட்டு
மதியை அழைக்கிறான்

மதி கைரேகையை வைக்க table-ன்
கண்ணாடியில் அம்மாவின் போட்டோ
தெரிகிறது

**[CUT]**

## SCENE NO : 32 SNATCHERS PLACE / INT / DAY

மதியும் அவனது நண்பர்களும் பேசிக்கொண்டிருக்கின்றனர்

**நண்பன்** : அன்னைக்கு உங்க அம்மா மட்டும் யாருக்காவது போன் பண்ணி இருந்தாங்க நம்மாலாம் காலி என்ன பண்றது..வேற option-ஏ இல்ல

**கணேஷ்** : evidence-லாம் எதுவும் இல்ல வேற யாரோ பண்ண மாதிரிதான் இந்த case போகுது

**கணேஷ்** : கொஞ்ச நாள்ல எல்லாம் normal ஆகிடும்…அப்பறம் அந்த செயின்க்கு கிருஷ்ணாவ அனுப்பிச்சு இருக்கேன் மூன்றலாம் வராதாம் ரெண்டுதான் வருன்னு சொல்றான்

**கணேஷ்** : மொத்தமா மதி வீட்டுல
அடிச்சது எல்லாத்துக்கும்
சேத்து கூட முப்பது
நாப்பதுதான் வரும் ok-ல

**மதி** : சரி o.k

Top angle shot zoom out ஆகிறது

**[CUT]**

**SCENE NO : 33** **POLICE STATION / INT / DAY**

அறிவு bench-ல் அமர்ந்திருக்க S.I
குமாரிடம்

**S.I** : மூணு பேர suspect
பண்றோம்
பாண்டி,ரமேஷ்,சங்கரு

**S.I** : பாண்டிய உள்ள கூப்ட்டு
இன்ஸ்பெக்டர்
விசாரிக்குறாரு மீதி ரெண்டு
பேரு எங்க போனாங்கனே
தெரியல

**குமார்** : சார் ரெண்டு நாள் ஆச்சு சார்

**S.I** : நான் என்ன பண்றதுப்பா
அப்படி பாத்தா தமிழ்நாட்டுல
எல்லா வீட்டுக்கும் போலீஸ்
protection-ஆ கொடுக்க
முடியும்.

செயினை பறிகொடுத்தவரின் அப்பாவின்
காட்சி

**S.I** : இதோ உட்கார்ந்து
இருக்காரு பார் அவர்
பொண்ணு நாலு நாளைக்கு
முன்னாடி ரோட்டுல நின்னு
friend-ஓட பேசிட்டு
இருந்துருக்கா கழுத்துல
நால்ர லட்ச ரூபா
செயின்னு எவனோ
அறுத்துருக்கான்

அறிவு S.I-யிடம்

**அறிவு** : accused மாட்டுனானா

**S.I** : ரோட்டுல எதுக்குப்பா
அவ்வளவு costly-ஆன
நகைய போட்டுட்டு போனும்

**அறிவு** : என்ன சார் நகை போட்டுட்டு
போனா திருடுவாங்க
இல்லனா rape
பண்ணுவாங்க பொண்ணுங்க
என்னதான் சார் செய்வாங்க

கையெழுத்து போட்டுவிட்டு பாண்டி
S.I-யிடம்

**பாண்டி** : வணக்கம் சார்

**பாண்டி** : how are you..?

**S.I** : இவன பாரு இவன் ஒரு ஒன்னா நம்பர் accused எனக்கு தெரிஞ்சே ரெண்டு பேர போட்டுருகான்..வீடு பூந்து கொள்ளை அடிக்கிறது இவன் பொழப்பு evidence இல்ல ஜாலியா சுத்திட்டு இருக்கான் ஆனா ஒரு நாள் மாட்டுவடி

**பாண்டி** : ஏன் சார் செத்து போன பொம்பள என்ன பெரிய இதுவா...இப்படி போட்டு குடயுறீங்கோ...சப்ப மேட்டருக்குலாம் இப்படி பண்றீங்களே சார்

**பாண்டி** : என்ன புடிச்சு disturb பண்ணாதீங்க வர்றேன் சார்

அறிவு bench-ல் இருந்து எழுகிறான்

குமார் பாண்டி போவதை முறைத்துப்பார்க்க, குமாரின் பின்னே இருக்கும் சுபாஷ்சந்திரபோஸ் போட்டோக்கு shift focus

குமாரும் அறிவும் பாண்டியை bikeகில் follow செய்கின்றனர்

அறிவு பாண்டியை அடிக்கும் flashback shot

பாண்டியை follow செய்கிறார்கள்

அறிவு கோல்ட் கேட்பது வாங்குவது போன்ற flashback shots

**அறிவு** : எனக்கு அந்த கோல்ட் வேணும்

**அறிவு** : உன் ஏஜெண்ட்கிட்ட பேசு

**பாண்டி** : சொன்ன விட்டுருவியா

**அறிவு** : black market-ல கோல்ட் எங்கெல்லாம் travel ஆகுதுன்னு பாக்கணும்

ஏஜென்ட் அரவிந்த் அறிவிடமும் குமாரிடமும்

**அரவிந்த்** : பத்து மணிக்கு வர சொல்லிருக்காங்க

**[CUT]**

## SCENE NO : 34 GOLD MELTING PLACE(OUT) / INT / DAY

Flashback relieve

Out of focus to shift focus

ஏஜென்ட் அரவிந்த் அறிவு குமார்
மூவரும் ஒரு இடத்தில்
நின்றுகொண்டிருக்க

ஏஜென்ட் அரவிந்த் போனில்

**அரவிந்த்** : ஏய் ஜிங்லி மாமா இன்னும் two hours-ல வந்துருவேன்டா வரும் போது ஒரு happy news கொண்டு வர்றேன்

**குமார்** : happy news-ஆ

**அரவிந்த்** : ஆ வையி போன வையி

அரவிந்த் போனை கட் செய்கிறான்

குமார் அரவிந்திடம்

**குமார்** : excuse me சார் correct-ஆ இங்கதான் வர்றேனு சொன்னாங்களா

**அரவிந்த்** : இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கு..இந்த தோழில்ல இருக்குறவங்க எல்லாம் punctual-ல இருப்பாங்கா

அரவிந்த கொசு கடிப்பதால் கையை தடவிக்கொண்டு

**அரவிந்த்** : ச்ச ச்ச ச்ச ச்ச ச்ச

அங்கே ஒரு வயதானவர் கையில் ஒரு நடைக்கம்பியுடன் வருகிறார்

வயதான் அவர்களிடம்

**தாத்தா** : மணி என்னாச்சு

குமார் வயதானவரிடம்

**குமார்** : ஆ ten

**அரவிந்த்** : ஏய் இவனுக்கெல்லாம் எங்கடா English தெரியபோகுது மணி பத்தாச்சு பே....

வயதானவர் அரவிந்தை பார்த்து

**தாத்தா** : what is your I.D number

அறிவு குமார் அரவிந்த் ஆகிய மூவரும் அதிர்ச்சியில் நிற்கிறார்கள்

அரவிந்த் வயதானவரிடம்

**அரவிந்த்** : 4 6 8 7 1 4

வயதானவர் காதில் போனை வைத்து

**தாத்தா**: மூணு பேரு…அரவிந்த் யாரு

**அரவிந்த்** : its me சார்

**தாத்தா** : நீ மட்டும் வா

வயதானவர் போனை கட் செய்கிறார்

அறிவு வயதானவரிடம்

**அறிவு** : ஹலோ யாரையும் நம்பி பொருள கொடுத்து விட முடியாது நாங்களும் வருவோம்

**அறிவு** : correct-ஆன ஆளான்னு பாக்கணும்

**அரவிந்த்** : புரிஞ்சுக்கோங்க பொருள் அவனோடது

வயதானவர் அவருக்கு பின்னே வண்டியில் படுத்திருக்கும் ஒருவனிடம்

**தாத்தா** : இவுங்க கூட யாரவது வந்துருக்காங்களா

**ஆண்** : யாரும் வரல

**தாத்தா** : ம் வா

வயதானவர் அந்த நடைகம்பியை ஒரு ஓரமாக வைத்துவிட்டு

என்று நடக்க தொடங்குகிறார் மூவரும் அவரை பின் தொடர்கின்றனர்

வயதானவர் ஒரு இரும்புகதவை திறந்துவிட்டு அரவிந்திடம்

**தாத்தா** : while going back take care of me

**அரவிந்த்** : ஆ

**தாத்தா** : போகும் போது கவனிச்சுட்டு போடா

அரவிந்த் அறிவு குமார் மூவரும் உள்ளே செல்கின்றனர்

வயதானவர் இரும்பு கதவை மூடுகிறார்

**[CUT]**

## SCENE NO : 34A GOLD MELTING PLACE (IN) / INT / DAY

அரவிந்த் அறிவு குமார் மூவரும்
குடோனின் உள்ளே நடந்து வருகின்றனர்

நடந்து கொண்டே அரவிந்த் அறிவிடம்

**அரவிந்த்** : அந்த கிழவன பாத்தியா
எல்லா மோசமான ஆளுங்க
சைலன்டா பண்றானுங்க

வெளில யாருக்கும்

தெரியாது correct-ஆ

பண்ணுனோம்னாக்கா காசு
சாம்பாரிச்சுட்டு போயிட்டே
இருக்கலாம்

எதிரே வவ்வால் கையில் juice டப்பா

ஒன்றை straw பொட்டு வைத்திருக்கிறான்

வவ்வால் அரவிந்தை வழிமறித்து

**வவ்வால்** : ஏய் நண்டு மூஞ்சி நீ
சொக்கலிங்கம் தான
அரவிந்துனானுங்க

**அரவிந்த்** : நம்ம தோழில்ல ஒரே
பேருல எப்படி

**வவ்வால்** : ஆ..என்ன doubt-ஆம் இவனுங்களுக்கு

வவ்வால் அறிவை பார்த்து

**வவ்வால்** : இது நரி மூஞ்சி

வவ்வால் குமாரை பார்த்து

**வவ்வால்** : தா இது என்ன மூஞ்சினே தெரியல

வவ்வால் பின்னே மூவரும் செல்கின்றனர்

வவ்வால் அறிவை மட்டும் உள்ளே அழைத்து செல்கிறான்

**வவ்வால்** : இந்தா பார் ஒருத்தன தான் allow பண்ணுவேன் வா

உள்ளே போகும் அறிவிடம் வவ்வால்

**வவ்வால்** : சிட்டியில நாமதான் perfect-ஆ பண்றோம் amount-லாம் corret-ஆ வந்துரும் அப்புறம் வெளில நண்டு மூஞ்சி over commission தோழில் செட்டாவாது ம் நீ போகும் போது நம்பர் வாங்கிட்டு போ அவன் வேலைக்கு ஆகமாட்டான் ஏதுவா

இருந்தாலும் direct-ஆ dealing பண்ணிக்கலாம் ம்.

**வவ்வால்** : நரி இதுதான் நம்ம factory

அறிவு அந்த இடத்தை பார்க்கிறான்

தங்கம் உருக்கும் இட்த்தின் atmosphere shot

வவ்வால் அறிவிடம்

**வவ்வால்** : சிட்டியில அடிக்குற 80 percent கோல்ட் இங்கதான் வரும் அத melt பண்ணி பிஸ்கட் ஆக்கி வித்துருவோம் அத வாங்கிட்டு போயிட்டு jewels பண்ணி கடையில வச்சு மறுபடியும் விப்பானுங்க. இதுனால நம்மளுக்கு எந்த பிரச்சனையும் வராது தைரியமா business பண்ணனாம்

ஒரு சிறுவன் செயினில் இருந்து டாலரை பிரித்தெடுக்கும் வேலையை செய்துகொண்டிருக்கிறான்.

வவ்வால் அங்குள்ள ஒருவனிடம் அறிவு கொண்டு வந்த பையை கொடுத்து

**வவ்வால்** : ஏய் டப்பா மூஞ்சி வா இத புடி check பண்ணிட்டு phone அடி

அறிவு அந்த சிறுவன் கழுத்தில் இருக்கும் டாலரை கையில் எடுத்து பார்க்கிறாள்

அந்த சிறுவனின் கிட்டேவந்து அந்த டாலரை கையில் எடுத்து பார்க்கிறான்

வவ்வால் அறிவு குமார் அரவிந்த் நால்வரும் வெளியே நிற்கின்றனர்

t.v ஓடிக்கொண்டிருக்கிறது

அரவிந்த் போனில்

**அரவிந்த்** : செல்லக்குட்டி நீ சிங்கப்பூர் போனுன்னு சொன்னல்ல மாமா அதுக்கான வேலைய பாத்துட்டு இருக்கேன் டா இன்னொரு two days-ல போயிறலான்ம் டா ஆ இதெல்லாமா போய் ஜிங்கிலிகிட்ட சொல்லுவாங்க அதெல்லாம் வர வர ஏதாவது சொல்லி adjust பண்ணிக்கிற வேண்டியதுதான்

அறிவு தன் இருகைகளையும் கட்டியபடி
சுவற்றில் சாய்ந்து நிற்கிறான்

அறிவு வவ்வாலிடம்

**அறிவு** : உங்களால எத்தன பொம்பளைங்க செத்து இருப்பாங்க

**வவ்வால்** : ஆ

**அறிவு** : உங்களால எத்தன பொம்பளைங்க செத்து இருப்பாங்க

வவ்வால் ஏஜென்ட்டை பார்த்து

**வவ்வால்** : யோவ் ஏஜெண்ட் இதோ பாருய்யா நரி மூஞ்சி பொம்பள கிம்பளனு sentiment பேசுது

**வவ்வால்** : தம்பி பொம்பளைங்க ரெண்டு விஷயத்துக்கு

வவ்வால் அறிவிடம் burger
சாப்பிட்டுக்கொண்டே

**வவ்வால்** : ஒன்னு பெத்துகிறதுக்கு இன்னொன்னு *****றதுக்கு

அறிவு வவ்வாலை முறைத்து
பார்க்கிறான்

Table மேல் இருக்கும் போன் ஒலிக்கிறது

வவ்வால் கையில் burger-வுடன்
சிரித்துகொண்டே போனை எடுத்து
பெசுகிறான்

**வவ்வால்** : என்ன டப்பா மூஞ்சி check
பண்ணிட்டியா

அறிவு table மேல் இருக்கும் கத்தியை
எடுத்து வவ்வால் தலையில்
சொருகுகிறான்

**அரவிந்த்** : ஏய்

வவ்வால் சரிந்து விழுகிறான்

**அரவிந்த்** : அய்யய்யோ

அரவிந்த் அதைப்பார்த்து அதிர்ச்சியில்
அங்கிருந்து ஓடுகிறான்

அறிவு தங்கம் உருக்கும் இடத்திற்குள்
செல்கிறான்

அந்த சிறுவன் கழுத்தில் இருக்கும்
டாலரை அறிவு கையில் எடுக்கிறான்

குமார் உள்ளே வருகிறான்

அறிவு அந்த சிறுவனிடம் டாலரை
காண்பித்து

**அறிவு** : இத யாரு கொடுத்தா

**சிறுவன்** : ஓ இதுவா ரெண்டு நாளைக்கு முன்னாடி குணா புள்ளைங்க கொண்டு வந்துச்சுங்க அதான் செயின அறுத்து போட்டுட்டு நல்லா இருந்துச்சுன்னு மாட்டிக்கினேன்.

குமார் அறிவிடம்

**குமார்** : டேய்

**குமார்** : என்ன

அறிவு டாலரை குமாரிடம் காண்பித்து

**அறிவு** : அம்மாடா

அறிவு அந்த சிறுவனிடம்

**அறிவு** : டேய் குணா யாரு எங்க இருக்கான்னு தெரியுமா

**சிறுவன்** : அதெல்லாம் எனக்கு தெரியாது இந்தா இருக்காங்காளே அவுங்கள்ட்ட கேளு

**அறிவு** : டேய் தம்பி நீ கிளம்புடா

அறிவும் குமாரும் அவர்களை
பார்க்கின்றனர்

அறிவும் குமாரும் ஒரு பையோடு அந்த
தங்கம் உருக்கும் இட்த்திலிருந்து
வெளியே ஓடிவருகின்றனர்

திடீரென்று அறிவும் குமாரும் எதிரே
இருப்பதை பார்த்து நிற்கின்றனர்

எதிரே அந்த வயதானவரும் அவர்
அருகில் ஒருவனும் நிற்கிறான்

வயதானவர் போர்வையை தொலில்
இருந்து வீசுகிறார்

அறிவும் குமாரும் இரண்டு பேரையும்
பார்க்கிறார்கள்

**[CUT]**

**SCENE NO : 35** **A.C.P HOME / INT / DAY**

A.C.P வீட்டிலுள்ள jeep-ன் மேல் ஒரு
bag இருக்கிறது

Bomb squad bag-யை check செய்த பின்
வரலாம் என signal காண்பிக்க

A.C.P-யும் inspector-ம் bag-யை நோக்கி
வருகின்றனர்

Bag-ன் மேல் ' TO Mr. A.C.P ' என்று ஒரு
அட்டையில் எழுதப்பட்டிருக்கிறது

Inspector அட்டையை எடுத்துவிட்டு
bag-யை திறக்கிறார்

Bag-ன் உள் திருடப்பட்ட நகைகள்
இருக்கின்றது

A.C.P inspector-யை பார்க்கிறார்

**[CUT]**

**SCENE NO : 36** **GOLD MELTING PLACE / INT / DAY**

மின்னல் சேகரும் அவனது அடியாளும்
அவர்களது இடத்திற்குள் வருகின்றனர்

அந்த வயதானவரின் உடல் ஒரு
போர்வையால் மூடப்பட்டிருக்கிறது

மின்னல் சேகர் போர்வையை விலக்க
அந்த பெரியவர் உடம்பு முழுவதும்
வயரால் கட்டப்பட்டுருக்கிறது

மின்னல் சேகரும் அவனது அடியாளும்
அங்கிருந்து சென்றவுடன் அந்த பெரியவர்
தனக்குதானே

**தாத்தா** : what a torture

அந்த வயதானவருடன் இருந்தவனும்
இன்னொரு பக்கம் கட்டப்பட்டுருக்கிறான்

மின்னல் சேகர் அவனை பார்க்கிறான்

வவ்வால் கத்தியால் குத்தப்பட்டு
இறந்துகிடப்பதை மின்னல் சேகர்
பார்க்கிறான்

மின்னல் சேகர் தங்கம் உருக்கும்
இடத்திற்குள் வருகிறான்

அங்கே மூவர் ஒருவர் மீது ஒருவராக
மயங்கிகிடக்கிறார்கள்

மின்னல் சேகர் தன் அடியாளிடம்

**மின்னல் சேகர்** : எத்தன கிலோ

**அடியாள்** : இருபத்தி மூணு

**[CUT]**

## SCENE NO : 37 APARTMENTAL AREA ROAD / INT / DAY

சாலையில் ஒரு வயதான security
சைக்கிளில் ஒரு தூக்குவாளியோடு
சென்றுகொண்டிருக்கிறார்

சைக்கிளின் chain கழற அந்த security
சைக்கிளை நிறுத்தி chain-யை பார்க்கிறார்

அந்த chain-யை சரி செய்ய
முயற்சிக்கிறார்

அதே சாலையில் ஒரு பெண் கையில்
ஒரு parcel-வுடனும் மற்றொரு கையில்
cellphone -னை காதில் வைத்து
பேசியபடியே நடந்து வருகிறாள்

அவளுக்கு பின்னே bike-ல் இருவர்
helmet அணிந்து அவளை நோக்கி
வருகின்றனர்

அந்த பெண்ணின் கழுத்தில் இருந்த
செயினை அந்த bikeகின் பின்னால்
இருப்பவன் அறுக்கிறான்

**பெண்** : அய்யய்யோ அவன பிடிங்க

அந்த பெண் கத்துகிறாள்

**பெண்** : அவன பிடிங்க

**பெண்** : அவன பிடிங்க செயின் அத்துட்டு போறான்

**குரல்கள்** : புடிங்க புடிங்க புடிங்க ஏய் ஏய்

இதை அந்த வயதான security பார்த்து அந்த திருடர்களின் மீது சைக்கிளை தூக்கி எறிகிறார்

திருடர்கள் வந்த bike சறுக்குகிறது

திருடர்கள் கீழே விழுகிறார்கள்

**குரல்கள்** : புடிங்க புடிங்க புடிங்க சீக்கிரம் வாங்கப்பா

Public அவர்களை பிடித்து அடிக்கிறார்கள்

**[CUT]**

**SCENE NO : 38** **POLICE STATION / INT / DAY**

போலீஸ் ஸ்டேஷனில் அந்த திருடர்களில் ஒருவனின் இருகைகளையும் இரு போலீசார் பிடித்திருக்க பெண் போலீஸ் லத்தியால் அவனது பின் பக்கத்தில் அடிக்கிறார்

அவன் வலியில் துடிக்கிறான்

**திருடன்** 1: மேடம் மேடம் அடிக்காதீங்க மேடம்

**போலீஸ்** : செயின் அறுக்கிறீங்களா

**திருடன்** 1: அய்யோ ஆ

அந்த பெண் போலீஸ் இன்னொரு திருடனை பிடிக்குமாறு இரண்டு போலீசாரிடமும் சொல்ல அவனையும் அதே போல் பிடிக்கின்றனர்

**போலீஸ்** : யோவ் அவன் கைய இழுத்து புடிய்யா

**திருடன்** 1: சார் சார் சார் சார்

அவன் அந்த பெண் போலீஸை பார்த்து

**திருடன்** 2: சார் சார் சார் சார் நான் ஒன்னும் பண்ணல நீங்க என் அம்மா மாதிரி

**போலீஸ்** : ஆ அம்மா

**திருடன்** 2: அம்மா அம்மா

**போலீஸ்** : அம்மாகிட்ட இப்படிதான் செயின் அறுப்பியா

**திருடன்** 2: அம்மா அம்மா

பெண் போலீஸ் லத்தியால் அவனது பின் பக்கத்தில் அடிக்கிறார்

**போலீஸ்** : அறிவு இல்ல

**போலீஸ்** : ஆள பாரு

அவன் அடிதாங்க முடியாமல் கீழே விழுந்ததும் அவனை மிதித்து அவனது கன்னத்தில் பளார் என்று அறைகிறார்

**திருடன்** 2 :அய்யோ

**[CUT]**

**SCENE NO : 39** **SNATCHERS PLACE / INT / DAY**

மதியின் phone ஒலிக்கிறது

மதி phone-யை attend செய்ய எதிர்புறம் கணேஷ்

**மதி** : சொல்றா

**கணேஷ்** : மச்சான் கிருஷ்ணாவும் உன்னியும் போலீஸ்ல மாட்டிக்கிட்டாங்கடா எல்லாம் குணா போட்டு கொடுத்த plan தான் station-ல வச்சு ரெண்டு பேரையும் புழிஞ்சுட்டாங்க குணாகிட்ட கேட்டா free-யா விடுன்னு சொல்றான் நம்ம பசங்கடா எப்படிடா free-யா விட முடியும் நீ சொன்னதுதான் மச்சி correct குணா நம்மள நல்லா use பண்ணிக்கிட்டான் டா

**கணேஷ்** : இப்ப இன்னொரு வேலையினு வேற கூப்பிடுறான் அவன கண்டிப்பா ஏதாவது பண்ணனும் மச்சி

**கணேஷ்** : நீ பசங்கள கூப்ட்டு உடனே வா

**கணேஷ்** : நா அங்க நேரா வ ந்துறேன்

**மதி** : o.k டா

கணேஷ் phone-யை cut செய்கிறான்

**[CUT]**

**SCENE NO : 40** **GUNA PLACE / INT / DAY**

கீரல் மணி புகையை இழுக்கிறான்.

குணா வாயிலிருந்து சரக்கு பாட்டிலை table-ல் வைத்துவிட்டு,மதியிடமும் மற்ற செயின் திருடர்களிடமும் புகைபிடித்தபடியே

**குணா** : பெசண்ட் நகர் நாலாவது தெருதான் spot

**குணா** : அந்த ஒருத்தன் wife-க்கு முப்பது சவரன் செயின் வாங்கி போட்டு இருக்கான்

**குணா** : அத போட்டு night பத்தர மணிக்கு குழந்தையோட walking போறா

**குணா** : husband இப்ப ஊர்ல இல்ல

**குணா** : பக்கத்து வீட்டுல bomb வெடிச்சாலும் யாரும் help-க்கு வரமாட்டாங்க அந்த பொண்ணுக்கு எந்த கீறலும் விழக்கூடாது..கத்தியின்றி ரத்தமின்றி அடிக்கனும்

**குணா** : யார் போறீங்க

மதி குணாவிடம்

**மதி** : நான் போறேன்

குணா மதியின் முகத்தில் புகையை விட்டு

**குணா** : ம் நீ ஒன்னும் நொட்ட வேண்டாம் முதல்ல discipline-னா என்னனு கத்துக்கோ

மதியின் நண்பன் ஒருவன் குணாவிடம்

**நண்பன்** : இல்லண்ணே அவனே பண்ணட்டும்

குணா சுருட்டை வாயில் வைத்து புகையை இழுத்துவிட்டபடியே அனைவரையும் பார்க்கிறான்

மதி குணாவிடம்

**மதி** : பண்ணனும்மானு கேக்கல பண்ண போறோன்னு சொல்றேன்

**மதி** : வேணுன்னு சொல்றத விட வேணான்னு அடிச்சு சொல்றதுதான் கெத்தில்ல

**மதி** : நீ எங்களுக்கு வேண்டாம்

**மதி** : இனிமே நாங்களே பாத்துக்குறோம்

குணா அனைவரையும் பார்த்து

**குணா** : என்னடா செட்டு சேந்துட்டீங்களா

குணா மதியின் சட்டை காலரை பிடித்து இழுக்க மதி குணாவிற்கு ஊசி ஏற்றுகிறான்

**கீரல்-மணி**: குணா

குணா நிலைதடுமாறுகிறான்

**கீரல்-மணி**: என்னால எழுந்திரிக்க முடியலடா

**கீரல்-மணி**: டேய் ஊசி போட்டீங்களே நாயே

**கீரல்-மணி**: டேய்

கீரல் மணி கத்துகிறான்

**கீரல்-மணி**: குணா

**கீரல்-மணி**: டேய்

**கீரல்-மணி**: டேய்

**கீரல்-மணி**: டேய்

**கீரல்-மணி**: குணா விழ போறடா

**கீரல்-மணி**: குணா குணா குணா

**கீரல்-மணி**: பாத்துடா குணா ஏய் நைனாகிட்ட வாடா

**கீரல்-மணி**: குணா

குணா அங்குள்ள சுவர்களில் போய் இடித்துக்கொள்கிறான்

குணா கீரல் மணியை மிதித்துவிட்டு table-யை மிதிக்கிறான்

**கீரல்-மணி**: ஏன்டா அடிச்ச

**கீரல்-மணி**: உங்கள விடமாட்டேன் டா டேய்

மதி சுருட்டை வாயில் வைத்து பற்ற வைக்கிறான்

புகைவிட்டபடியே குணாவை பார்க்கிறான்

குணா போதையில் chair-ல் விழுகிறான்

**கீரல்-மணி**: குணா என்னடா ஆச்சு குணா அய்யோ விழு ந்துட்டானே

அனைவரும் குணா முன் வந்து நிற்க, மதி

**மதி** : பெசன்ட் நகர் plan-ஆ நம்மளே முடிப்போம்

**கீரல்-மணி**: உங்கள விடமாட்டேன் டா

**மதி** : குணா he is out of the game

Song starts (RAP SONG)

மதி கண்ணடியை மாட்டுகிறான் அனைவரும் அங்கிரு ந்து கிளம்புகிறார்கள்

**[CUT]**

**SCENE NO : 41** **AUCTION PLACE / INT / DAY**

ஏலம் நடக்கிறது

ஏலம் நடத்துபவர் ஏலம் விட அங்கிருப்பவர்கள் ஏலம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்

**ஏலம் விடுபவர்** : சார் lot number 42 one portable vacuum cleaner

**ஏலம் விடுபவர்** : all is clear condition முழு தள்ளுபடி hundred rupees

**ஏலம் விடுபவர்** : one fifty,two hundred

**ஏலம் விடுபவர்** : three fifty,four hundred

**ஏலம் விடுபவர்** : once twice

**ஏலம் விடுபவர்** : price for hundred

**ஏலம் விடுபவர்** : மிஸ்டர் கணேசன் interest சொல்லிடுங்க எடுங்க சீக்கிரம் எடுங்க

அரவிந்த் கையில் ஒரு paper-யை வைத்து முகத்தின் முன் வீசியபடியே ஏலத்தை கவனித்துக்கொண்டிருக்கிறான்

**ஏலம் விடுபவர்** : electrical induction stove lot number 43

**ஏலம் விடுபவர்** : hundred rupees

**கூட்டம்** : one fifty

**ஏலம் விடுபவர்** : two hundred

**கூட்டம்** : முந்நூறு

**ஏலம் விடுபவர்** : three hundred

**ஏலம் விடுபவர்** : four hundred

**கூட்டம்** : four fifty

**ஏலம் விடுபவர்** : once twice

அங்கு மின்னல் சேகர் அவனது அடியாட்களுடன் வருகிறான்

மின்னல் சேகரை பார்த்ததும் ஏலம் விடுபவர் எழுந்து நிற்கிறார்

மின்னல் சேகரை பார்த்ததும்
அனைவரும் அமைதியாக எழுந்து
நிற்கிறார்கள்

மின்னல் சேகர் ஏலம் நடத்துபவரை
பார்த்துவிட்டு தனது விரலால்
அரவிந்தின் செயினை பிடித்து இழுத்து
அரவிந்தை அங்கிருந்து இழுத்து
செல்கிறார்

**[CUT]**

**SCENE NO : 41A** **OLD ROOM / INT / DAY**

மின்னல் சேகர் போனில்

**மின்னல் சேகர்** : என்னம்மா
சாப்பிட்டியாம்மா
சரிம்மா சரிம்மா
அப்பா ஒரு வேலையா
வந்துருக்கேன்மா ஒரு
uncle வந்துருக்காரு
பேசிட்டு சீக்கிரம்
வந்துறேன் o.k

அரவிந்த் முகம் வேர்த்தபடி
chair-ல் அமர்ந்திருக்கிறான்

மின்னல் சேகர் கண்ணாடியை கழற்றி
மடித்துக்கொண்டே

**மின்னல் சேகர்** : உன் கூட வந்த
ரெண்டு பேரு யாரு

**அரவிந்த்** : அண்ணே எனக்கு
எதுவுமே
தெரியாதுண்ணே நான்
கோல்ட் விக்கதானே
வந்தேன்

**அரவிந்த்** : நான் எவ்வளவோ தடுத்து பாத்தேண்ணே என்னைய அடிச்சு போட்டு ஓடிட்டாங்கண்ணே

**மின்னல் சேகர்** : நீதான்டா அங்கருந்து முதல்ல ஓடி இருக்க

**மின்னல் சேகர்** : என்னுடைய 23 கிலோ கோல்ட் government-ட கிட்ட போயிட்ச்சு

**மின்னல் சேகர்** : எந்த route-ல வந்தானுங்க அந்த ரெண்டு பேரும் எனக்கு வேணும்

**[CUT]**

**SCENE NO : 42** **GUNA PLACE / INT / DAY**

ஒரு ஈ focus-ல் தெரிய அறிவும் ,குமாரும் out of focus-ல் குணாவின் இடத்திற்குள் வருகின்றனர்

Shift focus to அறிவு,குமார்

குணா கீரல் மணியை ,மடியில் படுக்கப்போட்டு முகத்தில் lipstick போட்டு powder அடித்துக்கொண்டிருக்கிறான்

**கீரல்-மணி**: குணா விட்டுருப்பா pleaseடா டேய் குணா குணா குணா வேண்டாப்பா நான் வயசான ஆள்டா நைனாப்பா யப்பா நீ எவ்வளவு பெரிய கெத்தானா ஆளு இப்படியெல்லாம் பண்ணக்கூடாது

அறிவும்,குமாரும் குணாவை பார்க்கிறார்கள்

**கீரல்-மணி**: குணா டேய் டேய் டேய்

**கீரல்-மணி**: மூஞ்சியில கீறல் போட்டுருவேன் டேய் விடுறா நாயே

**கீரல்-மணி**: சொன்னா கேக்க
மாட்டேங்குற

குணா, அறிவையும் குமாரையும் பார்த்து முறைக்கிறான்

**கீரல்-மணி**: அய்யோ முறைச்சு
பாக்குறான் அப்பா

அறிவையும்,குணாவையும் பார்த்ததும் கீரல் மணியை குணா கீழே உருட்டிவிடுகிறான்

**கீரல்-மணி**: ஏய் மூஞ்சியிலயே கோலம்
போடுறேன் பார்

குணா கீரல் மணியை தன் காலால் மிதித்து அறிவு முன்னால் போய் நிற்கிறான்

**கீரல்-மணி**: அய்ய

அறிவு ,குணாவிடம்

**அறிவு** : யாருடா குணா

**கீரல்-மணி**: ஏய்

குணா முகத்தில் கையை வைத்துக்கொண்டு அறிவையும் குமாரையும் பார்க்கிறான்

**குமார்** : என்ன யோசிக்குறான்

கீரல் மணி அவர்களிடம்

**கீரல் மணி**: அவன் தான்டா குணா

**அறிவு** : டேய் உங்கிட்ட இருந்த செயின் அடிக்கிற பசங்க எங்க

**கீரல்-மணி**: டேய் குணா

**குணா** : பே

**கீரல் மணி**: அப்படி அவனுங்கள பாக்காத டா டேய்

**கீரல்-மணி**: டேய் குணா

**கீரல்-மணி**: அப்படியெல்லாம் பண்ணாத குணா...குணா வாடா குணா

**கீரல்-மணி**: ஏய்

குமார் அறிவை பார்த்துவிட்டு கீரல் மணியை நோக்கி நடக்கிறான்

**கீரல்-மணி**: இங்க வா குணா...கொஞ்சம் தூக்கிவிடுங்கடா

குமார் கீரல் மணியை தன் கால்களால் புரட்டிப்போடுகிறான்

**கீரல்-மணி**: திருப்பிப்போடுறான் தூக்குடானா

குமார் கைகளால் கீரல் மணியை சேரில் நிமிர்த்தி வைக்கிறான்

**கீரல்-மணி**: டேய் டேய் வேணான்டா டேய்

**குமார்** : சொன்ன கேளு

**கீரல்-மணி**: லைட்டா தூக்குடா வேணாம் டேய்

குமார் ஒரு stool-யை எடுத்து கீரல் மணி முன் போட்டு அமருகிறான்

**கீரல்-மணி**: குணா.....chair-லாம் போட்டு உட்carறான்

**கீரல்-மணி**: யாருடா நீங்க

குமார் கீரல் மணியிடம்

**குமார்** : உங்ககிட்ட செயின் அடிக்கிற பசங்க எத்தன பேர் இருக்காங்க

**கீரல்-மணி**: டேய் குணாவ விடுங்கடா கேக்க மாட்டீங்களா

**குமார்** : சொல்றா...சொல்றா...

**குமார்** : வாய உடைச்சுருவேன்

அறிவு உள்ளே செல்ல முயற்சிக்கிறான்
குணா அவனை தடுத்து நக்கலடிக்கிறான்

கோபமடையும் அறிவு, குணா வாயில் குத்துகிறான்

கீரல் மணி அழுதுகொண்டே

**கீரல்-மணி**: டேய் குணாவ விட்டுருங்கடா

**கீரல்-மணி**: டேய்

**கீரல்-மணி**: அய்யய்யோ என் குணாவ அடிக்காதீங்க

**குமார்** : அப்ப சொல்ற சொட்ட

குணா வாயில் ரத்தம் வழிகிறது

குணா ரத்தத்தை நாக்கால் நக்கிவிட்டு அறிவை பார்த்து சிரிக்கிறான்

**கீரல்-மணி**: அடிக்காதீங்கடா குணாவ அடிக்காதீங்கடா டேய் நாங்கெல்லாம் கெத்தான ஆளுடா

**கீரல்-மணி**: எதுவும் பண்ணதீங்கடா

கீரல் மணி குமாரிடம்

**கீரல்-மணி**: நான் சொல்லிறேன் அவனுங்க மொத்தம் ஆறு பேரு

**கீரல்-மணி**: நாங்க only planning-தான் executive department அவனுங்கதான்

**கீரல்-மணி**: திடீர்னு ஒருத்தன் வந்தான் அவன் பேச்ச கேட்டு மாறி போயிட்டானுங்க குணாக்கு அது பிடிக்கல

அறிவு அங்கிருக்கும் table-யை பார்க்கிறான்

அறிவு செய்வது போல் குணாவும் செய்கிறான்

அறிவு table-யை நோக்கி நகர

**கீரல்-மணி**: ஊசி போட்டு போயிட்டானுங்க நைனா எல்லாம் நான் சொல்லிட்டேன்ல அய்யய்யோ அப்படியெல்லாம் பண்ணாதடா டேய் டேய்

குணாவின் முன் ஒரு ஈ வருகிறது,குணா அந்த ஈயை வாயால் பிடிக்க முயற்சிக்கிறான்

கீரல் மணி குமாரிடம் phone கேட்கிறான்

**கீரல்-மணி**: முதல்ல ஒரு போன் போட்டு கொடு emergency-டா நைனா

**குமார்** : நீயே emergency-லதான்டா இருக்க

குமார், கீரல் மணியின் உடம்பில் குத்துகிறான்

**குமார்** : சாவு சாவு அடி அடி அடி சாவு

அதற்கு கீரல் மணி

**கீரல்-மணி**: என் உடம்புல அடிச்சா எனக்கு வலிக்கவே வலிக்காதுடா

குமார்,கீரல் மணியின் தலையில் அடிக்கிறான்

**குமார்** : அப்படியாடா அப்ப தலையில வாங்கிக்க

குணா அங்கும் இங்கும் ஓடி ஈயை பிடிக்க முயற்சிக்கிறான்

குமாரின் அடியை பொறுக்கமுடியாமல் கீரல் மணி

**கீரல்-மணி**: சொல்றேன்டா

**குமார்** : சொல்றா சொல்றா

**கீரல்-மணி**: சொல்றன்டா night பத்தர மணிக்கு பெசன்ட் நகர் நாலாவது தெருவுல ஒரு பொண்ணுகிட்ட செயின் அடிக்க போய் இருக்கானுங்க அங்க போன புடிச்சுடலான்டா டேய் சொல்லிடேன்ல போன கொடுறா இல்லனா மூஞ்சில கீறல் போட்டுருவேன் டேய்

குமார் எழு ந்து கீரல் மணியின் வாயில் மிதித்துவிட்டு அறிவின் அருகில் செல்கிறான்

**குமார்**: செத்து தொல

**கீரல்-மணி**: நாயி வாய்லயே அடிக்குறான்டா

கீரல் மணி அழுகிறான்

அறிவு குமாரிடம்

**அறிவு** : பெசண்ட் நகர் fourth street பத்தர மணிக்கு வர்றாங்க

குணா,அறிவு மற்றும் குமார் பின்னே நின்றுகொண்டு அவர்களை வெறுப்பேற்றுகிறான்

**கீரல்-மணி**: குணா அவனுங்ககிட்ட போகாதடா டேய் சொன்னா கேளுடா டேய் குணா கிட்ட வராதடா டேய் அவனுங்கள அப்படி பாக்காதடா வெறுப்பு ஏத்தாதடா குணா நாயே டேய் சொன்னா கேளுடா இவனா தலைய ஆட்டுறானே அப்படியெல்லாம் நக்காதடா அய்யோ முறைச்சு பாக்குறானுங்களே மூணு பேரு மூஞ்சில கோலம் போடப்போறேன் டேய் எங்கிட்ட வாடா உன் மூஞ்சில கீரல் போடுறேன்..கிட்ட வர்றானே

குமார் table-ல் இருக்கும் ஊசியை எடுத்துக்கொண்டு கீரல் மணியிடம் செல்கிறான்

குமார்,கீரல் மணியிடம்

**குமார்** : ஏய் emergency இதென்ன அவ்வளவு பவராடா

**கீரல்-மணி**: ஆமாடா உச்சகட்ட போதைடா வேற உலகத்துக்கே போலாம்டா

**குமார்** : அப்ப நீ வாங்கிக்க

குமார் ஊசியை கீரல் மணியின் கழுத்தில் குத்துகிறான்

கீரல் மணி: தல மட்டும்தான் working condition-டா

**[CUT]**

**SCENE NO : 43** **SNATCHERS PLACE / EXT / DAY**

BGM starts

ராஜ் கையில் நிறைய helmet-களுடன் மதியையும், நண்பர்களையும் நோக்கி நடந்து வருகிறான்.

செயின் பறிக்க தயாராகிறார்கள்

**[CUT]**

## SCENE NO : 44 BESANT NAGAR $4^{TH}$ STREET / EXT / NIGHT

தெருவில் ஒரு பெண் காதில் headphone
மாட்டிக்கொண்டு பாட்டுகேட்டபடியே
baby trally-ல் தன் குழந்தையை
தள்ளிக்கொண்டு செல்கிறான்

மதி,கணேஷ்,ராஜ் மற்றும் ரோஹித்
நால்வரும் ஒரு இடத்தில் நின்று
பேசிக்கொண்டிருக்கிறார்கள்

மதியும்,கணேஷும் வேறொரு இடத்தில்
நிற்க ராஜும்,ரோஹித்தும் chain பறிக்க
bike-ல் கிளம்புகிறார்கள்

Bike-ன் headlight on ஆகிறது

Bike அங்கிருந்து நகர்கிறது

அந்தப்பெண் குழந்தையை trally-ல்
தள்ளிக்கொண்டு வருகிறாள்.

Bike besant nagar $4^{th}$ street-ல்
நுழைகிறது

Bike பெண்ணின் எதிரே வருகிறது

அந்த பெண்ணின் பின்னே bike-ல் இருவர்
helmet அணி ந்து வருகிறார்கள்

ராஜ் அந்த பெண்ணின் பின்னே bike-ல்
வருபவர்களை பார்க்கிறான்,ரோஹித்
ராஜின் தோளை தட்டுகிறான்

ரோஹித் அந்த பெண்ணின் கழுத்தை
நோக்கி கையை நீட்டுகிறான்

ரோஹித்தின் கை அப்பெண்ணின்
கழுத்தருகே வர அந்த பெண்ணின்
பின்னே வந்த bike-ல் பின்னே இருப்பவன்
ரோஹித்தின் கையை பிடித்திழுத்து கீழே
போடுகிறான்

இரு bikeகுகளும் சிறிது தூரம் சென்று
அந்த பெண்ணின் முன்னே பின்னே
நிற்கின்றன

அந்த பெண், குழந்தையை
தூக்கிக்கொண்டு ஓடுகிறாள்

ரோஹித்தை கீழே இழுத்துப்போட்டவன்
bikeகில் இருந்து ஒரு கம்பியை எடுத்து
ரோஹித்தின் கையில் பலமாக
மாறிமாறி அடிக்கிறான்

bike ஓட்டி வந்தவன் ஒரு கத்தியை
எடுத்து ராஜை நோக்கி ஓட ராஜ்
அவனை அடித்து தூக்கி சுற்றி எறிகிறான்

ராஜ் ஓடி வந்து ரோஹித்தை அடிப்பவனை மிதிக்கிறான்

**குமார்** : டேய் விடுறா விடுறா

ராஜ்,முன்னே சுற்றி எறிந்தவன் பின்னிருந்து ராஜின் கழுத்தில் ஏறி அமர

**நண்பன்** 1: ஏய் ஏய் ஏய் ஏய் ஏய் ஏய் ஏய் ஏய் ஏய் ஏய் ஏய் ஏய் விடுறா

மற்றொருவன் கம்பியை எடுத்து ராஜின் முகத்தில் குத்துகிறான்

மதி கணேஷிடம்

**மதி** : இந்நேரம் வந்துருக்கனுமே

**கணேஷ்** : இவனுங்க எப்பவுமே லேட்டா வர்றானுங்கடா இப்பல்லாம்

**மதி** : சரி வா பாக்கலாம்

மதியும் கணேஷும் bike-யை எடுத்துக்கொண்டு அ ந்த தெருவிற்குள் நுழைய ராஜின் helmet-ல் கம்பி குத்தப்பட்டிருப்பதையும்,ரோஹித்தின் கழுத்தை கத்தியால் ஒருவன் வெட்டுவதையும் பார்த்து அதிர்ச்சியடைகின்றனர்

**மதி** : டேய் மச்சான் அங்க பாருடா

**குரல்** : டேய்

கணேஷ் bike-யை நிறுத்திவிட்டு ரோஹித்தின் கழுத்தை வெட்டியவனை நோக்கி ஓடி வந்து அவனை அடிக்க

ஹெல்மெட் அணிந்த இருவரும் சேர்த்து கணேஷை அடிக்கின்றனர்

அதில் ஒருவன் அருகில் கிடக்கும் கத்தியை எடுத்து கணேஷின் தோளில் இருக்கிறவன்

கையில் கத்தியை எடுக்கும் மதி இதை பார்த்து அதிர்ச்சியடைகிறான்

கணேஷை குத்தியவன் மதியை பார்த்து விரலசைத்து அழைக்க

**குரல்** : டேய் வாடா டேய் டேய்
வாடா டேய் புடிறா ஏய்
வாடா டேய் ஏய் மச்சான்
மச்சான் ஏய் வாடா மச்சான்
வாடா டேய் ஏய் வேணாம்
ஏய் விடுறா ஏய் ஏய்

மதி பயந்து ஓடி bikeகில் ஏற முயற்சிக்கிறான், bike கீழே விழுகிறது

மதி அங்கிருந்து ஓட அவனை துரத்தி, அவனை பிடித்து கீழே தள்ளி சண்டையிடுகிறான்

மதி அவன் மேல் ஏறி அவனை அடித்து ஹெல்மெட்டை கழட்ட கீழே இருப்பவன் மதியை பார்த்து அதிர்ச்சியாகிறான்

**மதி** : டேய் டேய் வாடா

மற்றொருவன் மதியை வெட்ட கத்தியை எடுத்துக்கொண்டு வருகிறான்

மதி கீழே இருப்பவனை மிதித்துவிட்டு கத்தியை கொண்டு வருபவனை நோக்கி திரும்ப

கத்தியை கொண்டு வந்தவன் கத்தியை கீழேபோட்டு மதியின் முன் முட்டியிடுக்கிறான்

மதி அவனை பார்த்து

**மதி** : யாருடா நீ

அவன் ஹெல்மெட்டை கழட்டுகிறான்

ஹெல்மெட் அணிந்திருப்பவன் அறிவு
(revealing shot)

மதி அறிவிடம்

**மதி** : அண்ணே

**மதி** : என்னண்ணே இப்படி மாறிட்ட

அறிவு பாக்கெட்டில் இருக்கும் dollar-ரை காட்டுகிறான்

**மதி** : அய்யோ

**மதி** : அண்ணே

மதி அறிவுமுன் முட்டியிட்டு அவனை கட்டிபிடித்து

**மதி** : தெரியுண்ணே நான் தப்பு பண்ணிட்டேனு தெரியும்

**மதி** : ஆனா எனக்கு இதாண்ணே புடிச்சுருக்கு

**மதி** : அந்த ஓட்ட bus ஓட்ட bike-கு இந்த college

**மதி** : இதெல்லாம் எனக்கு பிடிக்கவே இல்லண்ணே என்ன விட்டுருண்ணே

**மதி** : நான் எங்கயாவது போயிறேன்

**மதி** : உன் பக்கமே நான் வரமாட்டேண்ணே

அறிவு அம்மாவை நினைத்துப்பார்க்கிறான்

**மதி** : என்ன வுட்டுருண்ணே

அறிவு மதியை இறுகப்பிடிக்கிறான்.

**மதி** : அண்ணே அண்ணே

**மதி** : அண்ணே

**மதி** : அண்ணே

**மதி** : அண்ணே அண்ணே அண்ணே

**மதி** : ஏய் அண்ணே

அவன் தலையில் ஹெல்மெட்டை அணிவித்து ஹெல்மெட்டை திருப்பி மதியை கொல்கிறான்

மற்றொரு ஹெல்மெட்டில் இருக்கும் குமார் இதைப்பார்த்து தன் தலையில் அடித்துக்கொள்கிறான்

**[CUT]**

**SCENE NO : 44A ON ROAD, HOME / INT, EXT / NIGHT**

அறிவும்,குமாரும் bike-ல் வீட்டிற்கு
செல்கின்றனர்

அறிவும் குமாரும் வீட்டிற்கு வந்து
அப்பாவிடம் சொல்ல, அப்பா அழுகிறார்

**[CUT]**

**SCENE NO : 45 HOME, POLICE STATION / INT / DAY**

அறிவு shower-ல் குளிக்கிறான்

சட்டை மாற்றுகிறான்

அம்மா தம்பி போட்டோ முன்
கண்கலங்கி நிற்கிறான்

அறிவும் குமாரும் போலீஸில் சென்று
சரணடைகிறார்கள்

**[CUT]**

# THE END